கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
19-8-1973
30 காசு



AAAS/B/156 TAM



12 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகள் தங்களது சேமிப்புக் கணக்கை தாமே நடத்தலாம்.

கோகுலம்


மலர் 2 : இதழ் 11

செப்டம்பர் 2, 1973


பிரமாதீச, ஆவணி 17

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

— பாரதியார்



★



சந்தா விவரம் :

ஒரு வருடம் ரூ. 10—00

ஆறு மாதம் ரூ. 5—00


நிர்வாகி, கோகுலம்


கல்கிப் பூங்கா, சென்னை-600031

அட்டையில் :

வண்ணப் பந்து
வைத்திருக்கும் பையா!
வாழ்க்கை ஒரு
சக்கரம்தான் - மெய்யா?

வண்ணப்படம் :
புஷ்பத்துறை சுப்ரமணியம்





அருமைக் குழந்தைகளே !

கோகுலம் ஆரம்பித்து ஒரு வருஷத்துக்கு மேலாகிறது. கோகுலத்தை நீங்கள் எத்தனை உற்சாகமுடன் வரவேற்றுப் படித்து மகிழ்ந்து வருகிறீர்கள் என்பதை அறிந்து பெருமிதம் அடைந்து வந்தேன். பத்திரிகைக் காகிதத்தின் விலை உலகெங்கும் அபரிமிதமாக உயர்ந்து விட்டது. பத்திரிகை தயாரிப்பதற்கான மற்ற பல பொருள்களின் விலை ஏற்றமும் பயங்கரமாயுள்ளது. உங்கள் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் குலைக்கக் கூடாது என்று எப்படியெல்லாமோ சிரமப்பட்டு உங்களுக்குத் தட்டில்லாமல் கோகுலம் கிடைக்கச் செய்து வந்தேன். ஆனால் இனி அது சாத்தியமில்லை என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

பத்திரிகை அச்சிடப் பயன்படும் 'நியூஸ் பிரிண்ட்' என்ற அச்சுக் காகிதத்துக்கு உலகம் முழுவதுமே தட்டுப்பாட்டு நிலை ஏற்பட்டிருக்கிறது. மேலும் பத்திரிகை வெளியிடும் நிறுவனங்கள் தங்கள் தேவையில் முப்பது சதவிகிதத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று அரசாங்கமே ஆணை பிறப்பித்து விட்டது. இந்த நிலைமையில் செப்டம்பர் 2-ந் தேதி இதழிலிருந்து கோகுலத்தின் விலையை 40 பைசாவாக உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி ஓர் அதிர்ச்சியை உங்களுக்கெல்லாம் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டதை எண்ணி நான் வருந்துகிறேன். தவிர்க்க முடியாததை நீங்களும் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தொடர்ந்து கோகுலத்திடம் அன்பும் ஆதரவும் காட்டுவீர்கள் என்று நம்புகிறேன்.

பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்தவாரியார்

கஜமுகாசுரன்

கஜமுகாசுரன் என்ற ஒரு கொடிய அரக்கன் இருந்தான். இவன் **மாகத** முனிவருக்கும், **விபூதி பெற்ற** அசுர மாதுக்கும் பிறந்தவன்.

இவன் சிவபெருமானை நோக்கிப் பல்லாண்டுகள் தவம் புரிந்தான். அவனுடைய கடுந் தவத்துக்கு இரங்கிய சிவபெருமான் அவனுக்குக் காட்சி தந்தருளினார். ''உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்று கேட்டார்.

கஜமுகாசுரன், ''கண்ணுதற் கடவுளே! தேவரும் மூவரும் எனக்கு அடங்கி யிருக்க வேண்டும். யாவரையும் வெல்லும் வீரமும் வலிமையும் மரணமில்லாத தகைமையும் வேண்டும்'' என்றான். வள்ளலாராகிய சிவபெருமான் அவனுக்கு அவ்வரங்களை வழங்கியருளினார். வரம் பெற்ற கஜமுகாசுரன் மிகுந்த செருக்குடன் தேவர்களையும், முனிவர்களையும் துன்புறுத்தினான். அவர்களை அடக்கியாண்டான். மாலயனாதி வானவர்களைப் பிடித்து இழுத்துக் கொண்டு வருமாறு கட்டளை யிட்டான். அவனுடைய ஏவலர்கள் திருமால், திசைமுகன், இந்திரன் முதலிய இமையோர்களை ஆர்த்து ஈர்த்து வந்தார்கள்.

''ஏ தேவர்களே! நீங்கள் என் முன் இரு காதுகளையும் பிடித்துக் கொண்டு தினம் தினம் காலை, உச்சி, மாலை என்று மூன்று வேளைகளிலும் 1008 தோப்புக் கரணம் போடவேண்டும்'' என்று கட்டளையிட்டான். அவனுக்கு அஞ்சிய அமரர்கள் மூன்று நேரங்களிலும் 1008 தோப்புக்கரணங்கள் போட்டு அயர்ந்து போனார்கள். தினந்தோறும் 3024 தோப்புக்கரணம் இடுவதனால் மிகவும் வருந்தி வாடினார்கள்.

எல்லோரும் திருக் கயிலை மலை சென்று சிவபெருமானை வணங்கினர்.

''அருட்பெருங் கடலே! கஜமுகாசுரனுடைய கொடுமையால் நாங்கள் களைத்துப் போனோம். எம்மைக் காப்பது தேவரீரது கடன். இனி எம்மால் இத்துயரத்தைத் தாங்கமுடியாது. எம்மைக் காத்தருள்வீர்'' என்று அழுது தொழுது முறையிட்டார்கள். கயிலைநாதர் கருணை புரிந்தார்.

தமது அருகில் வீற்றிருந்த விநாயகப் பெருமானைக் கடைக் கண்ணால் பார்த்தருளினார்.

''விநாயக! நீ விரைந்து சென்று கஜமுகாசுரனை மாய்த்து விண்ணவர்களின் இடர் தீர்த்து இன்னருள் புரிவாயாக'' என்று கூறித் தண்ணருள் புரிந்தார்.

விநாயகப் பெருமான் மணித் தேர் மீது ஆரோகணித்து, வில் வாள் முதலிய படைக் கலங்களைத் தரித்துப் பூத கணங்கள் புடை சூழப் போருக்குப் புறப்பட்டார். போர்ப் பறைகள் முழங்கின. வானவர்கள் மகிழ்ந்தார்கள். விண்ணும் மண்ணும் அதிர்ந்தன. பூத கணங்களுக்கும் அசுர கணங்களுக்கும் போர் நடந்தது. இறுதியில் விநாயகப் பெருமான் கஜமுகாசுரனுடன் கடும் போர் செய்தார். விநாயகர் ஏவிய கணைகள் யாவும் கஜமுகன் மீது வீழ்ந்து பாறையில் வீழ்ந்த மழைத் துளிகள் போல் கூர் மழுங்கின.

அப்போது ''விநாயகமூர்த்தி! இவன் எப்படைகளாலும் மாயா வரம் பெற்றவன்'' என்ற வானொலி எழுந்தது.

விநாயகர், ''படைகளால் மாயா வரம் பெற்ற இவனை தமது தந்தத்தால் அந்தத்தை அடையச் செய்வோம்'' என்று திருவுளம் கொண்டார்.

தமது திருமுகத்தில் உள்ள வலக் கொம்பை முறித்து சில மந்திரத்தைக் கூறி ஏவினார். அந்த ஞானமேயாய தந்தம் கஜமுகாசுரனைப் பிளந்தது. மாயா வரம் பெற்ற அவன் பெருச்சாளி வடிவுடன் விநாயகரை எதிர்த்து வந்தான். விநாயகர் அவன் மீது கருணை மழை பொழிந்தருளினார். அவனுடைய அறியாமை அகன்றது.

மெய்யுணர்வு பெற்றான். விநாயகரை வணங்கி நின்றான். அந்த மூஷிகத்தை விநாயகர் தமது வாகனமாகக் கொண்டருளினார்.

வானவர்கள் மலர் மழை பொழிந்தார்கள்.

சங்கரன் மதலாய்! சரணம் சரணம்

இபகரமுடைய அண்ணா! சரணம்





பொங்கர வணிந்த புனிதா! சரணம்
எங்களை யாண்டருள் இறைவா! சரணம்

என்று துதித்து வணங்கினார்கள்.

''விநாயகர் மாலயனாதி வானவர்களே! உமக்கு என்ன வரம் வேண்டும்? கேளுங்கள்!'' என்று கூறி அருள் புரிந்தார்.

அமரர்கள், ''ஆனை முகத்து அண்ணலே! நாங்கள் இத்தனை காலம் கஜமுகாசுரனுக்குக் காலை, உச்சி, மாலை நேரங்களில் ஆயிரத்தெட்டுத் தோப்புக் கரணங்கள் போட்டோம். இனி தேவரீர்முன் அதனைச் செய்ய அருள் செய்க'' என்றார்கள்.

பிள்ளையார் புன்முறுவல் புரிந்து ''மூன்று முறை தோப்புக்கரணம் இட்டால் போதும்'' என்று கூறி அருள் புரிந்தார். அன்று முதல் அமரர்களும் அடியார்களும் அப் பெருமானுடைய திருமுன் தோப்புக்கரணம் இட்டு வழிபாடு செய்வாராயினர்.

விநாயகரது திரு முன் தோப்புக் கரணம் இடுவதனால் அறிவு வளர்ச்சியும் உடல் நலமும் உண்டாகும். பிள்ளையாரது பெருங் கருணைக்கு உரியவர்களாக ஆவார்கள்.

விநாயகப் பெருமான் ஞானத்தின் திருவுருவம். கஜமுகாசுரன் ஆணவ மலம். அழிவில்லாத ஆணவ மலம் விநாயக மூர்த்தியிடம் அடங்கி ஒடுங்கி ஊர்தியாக நின்றது என்பது இதன் உட்பொருள். (தொடரும்)



ஆப்பிரிக்காவின் கிழக்குக் கரையில் இந்து மகா சமுத்திரத்தில் இருக்கிறது மடகாஸ்கர் என்ற தீவு. இங்கு வசிப்பவர்களும் ஆப்பிரிக்க நீக்ரோ வகுப்பினர்தான். முன்னொரு காலத்தில் இந்த மடகாஸ்கர் தீவில் மூன்று சகோதரிகள் வசித்து வந்தார்கள். மூவரும் அழகிகள். பணக்காரிகளாகவும் இருந்தார்கள். இவர்களில் கடைசிச் சகோதரியின் பெயர் இஃபாரா. தன் மூத்த சகோதரிகள் இருவரையும்விட 'இவள் ரொம்ப அழகி.

ஒரு நாள் இஃபாரா தூங்கிக் கொண்டிருக்கும்போது ஓர் இனிமையான கனவு கண்டாள். அழகிய ராஜகுமாரன் ஒருவன் மேகங்களின் மீது ஒயிலாகச் சாய்ந்தபடி ஆகாயத்திலிருந்து இறங்கி வருகிறான். இஃபாராவின் அருகில் வந்து 'என்னை மணந்து கொள்ளுகிறாயா?' என்று கேட்கிறான். இந்த இனிமையான கனவை விழித்துக் கொண்ட பிறகும் நினைத்து மகிழ்ந்து கொண்டிருந்தாள் இஃபாரா. அவர்கள் குலதெய்வமான சூரியக் கடவுளின் மகன்தான் அந்த இளவரசன் என்பதில் அவளுக்குக் கொஞ்சமும் சந்தேகமே இல்லை.

தான் கண்ட கனவைப் பற்றித் தன் சகோதரிகளிடம் கூறினாள் குட்டித் தங்கை இஃபாரா. தங்களைவிடத் தங்கள் தங்கை அதிக அழகாக இருந்ததால் மூத்த சகோதரிகளுக்கு எப்போதுமே அவள் மீது பொறாமை உண்டு. இப்போது அவள் கண்ட கனவினால் ஆத்திரமே அடைந்தார்கள். சூரியனின் மகனே அவளுக்கு மணாளனாக வந்து விடுவானோ என்று குரோதம் கொண்டனர். எப்படியாவது அவளைக் கொன்றுவிட வேண்டும் என்றும் தீர்மானித்து விட்டார்கள்.

சகோதரிகள் மூவரும் காய் கனி கிழங்குகளைச் சேகரித்து வர அடிக்கடி கானகத்துக்குப் போவது வழக்கம். அதன்படி ஒரு நாள் இஃபாராவையும் அழைத்துக் கொண்டு கானகத்துக்குக் கிளம்பினார்கள். கள்ளங் கபடமற்ற இஃபாரா தன் சகோதரிகளுக்கு உதவுவதற்கு எப்போதும் விருப்பமுடையவள். ஆகவே, இம்முறையும் அவர்களுடன் வருவதற்குச்

கிருஷ்ணவேணி

சம்மதித்தாள். வழக்கமாகச் சகோதரிகள் கானகத்தினுள் வெகுதூரம் போகமாட்டார்கள். ஏனென்றால் கானகத்தின் நடுவே இட்ரிமோப் என்ற அரக்கனின் தோட்டம் இருந்தது. அதில் மிகப் பெரியதும் மிக்க சுவையுடையதுமான பழங்களும் கிழங்குகளும் கிடைக்கும். ஆனால் அரக்கனிடம் சிக்கிக் கொண்டால் அவ்வளவுதான், சிக்கியவர்களை அது சுவைத்து உண்டுவிடும். ஆகவே, யாரும் கானகத்தின் மையப் பகுதிக்குப் போக மாட்டார்கள்.

மூத்த சகோதரிகள் இருவரும் திட்டமிட்டுக் கொண்டு வந்திருந்ததால் கொஞ்ச தூரம் கானகத்தில் இங்கும் அங்கும் சேர்ந்தே உணவுப் பொருள்களைச் சேகரித்துவிட்டுப் பிறகு, ''நாம் வெவ்வேறு திசைகளில் போய் நிறையப் பழங்களைச் சேமித்துவருவோம்'' என்று கூறி இஃபாராவை இட்ரிமோப் தோட்டம் உள்ள பாதையில் போகச் செய்து இவ்விருவரும் வேறு வேறு பாதைகளில் நல்லவர்களைப் போலப் பிரிந்து சென்று மறுபடியும் சேர்ந்து கொண்டு வீட்டுக்குத் திரும்பி விட்டார்கள்.

இஃபாராவுக்கு இவர்களுடைய கெட்ட எண்ணம் தெரியாததாகையினால் உற்சாகத்துடன் பழங்களையும் காய் கிழங்குகளையும் சேமித்தபடி அரக்கனின் தோட்டத்துக்குள்ளும் புகுந்து விட்டாள். அங்கு நிறையப் பழமரங்களைக் கண்ட இஃபாராவுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அதிலுள்ள அபாயத்தை உணராமல் பெரிய பெரிய பழங்களாகப் பறித்துச் சேமிக்கலானாள். அதே சமயம் இட்ரிமோப் அரக்கன் அவளைப் பிடித்துக் கொண்டது. ''என் தோட்டத்துப் பழங்களைத் திருடிய நீ என்னுடன் வந்து விடு. உன்னை நான் அன்போடு வளர்க்கிறேன். நீ நன்கு வளர்ந்து பெரியவளாகிக் கொழுத்ததும் உன்னையே மணந்து கொள்ளுகிறேன்'' என்று கூறித் தன் குகைக்கு அழைத்துப் போயிற்று. சின்னப் பெண்ணான இஃப்ாரா என்ன செய்வாள்? அதற்கு அடிமையாகிப் போவதைத் தவிர அவளுக்கு வேறு வழி ஏது?



இஃபாரா வளர்ந்து பெரியவளானுள். அவளை விருந்தாக்கிக் கொள்ள இட்ரிமோப் ஒரு நாளையும் குறித்துவிட்டது மனத்துக்குள். அந்த நாளும் வந்தது. வழக்கப்படி வேட்டைக்குக் கிளம்பிற்று இட்ரிமோப்.

விபரீதத்தை அறியாமல் வீட்டு வேலை செய்து கொண்டிருந்த இஃபாராவின் முன்னுல் ஒரு சுண்டெலி வந்து தன் பின்னங் கால்களில் நின்றது. அது மட்டுமல்ல; அது அவளை நோக்கிப் பேசவும் செய்தது. ஆச்சரியப்பட்டுப் போன இஃபாரா அதை அப்படியே தன் உள்ளங் கைகளில் அள்ளி அணைத்து எடுத்துக் கொண்டாள்.

''எனக்குக் கொஞ்சம் அரிசியும் வெல்லமும் கொடு. நான் ஒரு ரகசியத்தைச் சொல்லுகிறேன்'' என்றது எலி.

''உனக்கு இல்லாத அரிசியா?'' என்று கூறி அதற்குச் சுவை மிக்க அரிசியும் கட்டி வெல்லமும் கொடுத்தாள். அதை எலி தின்று முடித்ததும் சொல்லிற்று. ''கவனமாகக் கேட்டுக் கொள். இட்ரிமோப் உன்னை இவ்வளவு தளதளவென்று வளர்ப்பது எதற்காகத் தெரியுமா? உன்னையே சாப்பிடுவதற்காகத்தான். அதுவும் இன்றைக்கே நீ அதற்கு உணவாகப் போகிறுய். நான் சொல்கிறபடி கேட்டாயானுல் அதனிடமிருந்து நீ விரைவில் விடுபடலாம். நான் கொடுக்கும் இந்தப் பொருள்களை எடுத்துக் கொண்டு இங்கிருந்து ஓட்டம் பிடி. இட்ரிமோப் உன்னை அணுகும்போது இப்பொருள்களை ஒவ்வொன்ருக அதன் முன்னுல் போடு'' என்று கூறிக் காட்டுச் செடிகளைக் கொண்டு தயாரித்த ஒரு துடைப்பத்தையும் ஒரு முட்டையையும் ஒரு மூங்கில் கழியையும் வழுவழுப்பான ஒரு கூழாங் கல்லையும் சுண்டெலி இஃபாராவிடம் கொடுத்தது. இஃபாராவுக்கு ஒரே அதிர்ச்சியாக இருந்தது. சுண்டெலிக்குத் தன் நன்றியைத் தெரிவித்துவிட்டு அங்கிருந்து ஓடுவதற்குத் தயாரானுள். தன் படுக்கையில் ஒரு நெட்டி மரத் துண்டை வைத்து அதைப் போர்வையால் மூடினுள்.

இட்ரிமோப் இரவு வீடு திரும்பியது. உள்ளே எட்டிப் பார்த்தது. படுக்கையில் போர்த்திக் கொண்டு இஃபாரா படுத்திருப்பதாக எண்ணிய அது மகிழ்ந்தது. ''குட்டி நன்ருகத் தின்று கொழுத்துக் கிடக்கிறுள். அதனுல்தான் படுக்கையிலிருந்து எழுந்து வரக்கூட முடியாமல் தூங்குகிறுள்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டே ஈட்டியை வெகுவேகமாகப் படுக்கையில் பாய்ச்சியது. ஈட்டி நெட்டி மரத் துண்டில் போய்ப் பதிந்தது. ''என்ன சதைப் பிடிப்பான உடல்? ஈட்டி போய் நன்கு பதிந்துவிட்டதே!'' என்று வியந்தபடி போர்வையை விலக்கியது இட்ரிமோப். அடுத்த விநாடி அதன் முகம் கோபத்தினுல் விகாரமாகியது.

இஃபாராவின் கால் தடத்தைப் பற்றிக் கொண்டு சென்ற இட்ரிமோப் விரைவிலேயே அவளை நெருங்கிவிட்டது. ''என்னிடமிருந்து தப்பி ஓடிவிடலாம் என்று எண்ணினுய்? இதோ, உன்னைப் பிடித்துவிட்டேன்'' என்று ஓடி வந்தது. இஃபாரா உடனே தன்னிடமிருந்த துடைப்பத்தைக் கீழே போட்டாள். அடுத்த விநாடி காட்டுச் செடிகளாலான அந்தத் துடைப்பம் இஃபாராவுக்கும் இட்ரிமோப்புக்குமிடையே முட்கள் நிறைந்த குத்துச் செடிப் புதர்களாக வளர்ந்து சுவராக வழிமறித்தது. ஆனுல் இட்ரிமோப் அரக்கன் தன் பலமான வாளினுல் அந்த முட்புதர் சுவரை வெட்டி விலக்கி வழி ஏற்படுத்திக் கொண்டு முன்னேறலாயிற்று. ''இதோ, உன்னைப் பிடித்துவிட்டேன்'' என்றபடி. இஃபாரா உடனே தன்னிடமிருந்த முட்டையைக் கீழே உருட்டிவிட்டாள். அந்த முட்டை பூமியில் பட்டதும் இரண்டாகப் பிளந்து அதிலிருந்து வெள்ளமாக நீர் பெருகி அரக்கனை வழிமறித்தது. ஆனுல் அந்தப் பொல்லாத இட்ரிமோப்போ அத்தனை நீரையும் குடித்துவிட்டு, ''இந்தத் தடவை என்னிடமிருந்து தப்ப முடியாது'' என்று கூறியபடி முன்னேறியது. இந்தத் தடவை இஃபாரா சுண்டெலி கொடுத்த மூங்கில் கழியைக் கீழே போட்டுவிட்டு ஓடினுள். உடனே அவளுக்கும் அதற்குமிடையே அந்த மூங்கில் கழி பெரிய அடர்ந்த மூங்கில் காடாக வளர்ந்து வழிமறித்து நின்றது. ஆனுல் இந்தத் தடவையும் இட்ரிமோப் தனது வலிமை மிக்க வாளினுல் பின்னிப் பிணைந்து நின்ற மூங்கில் காட்டை வெட்டி வழி உண்டாக்கிக் கொண்டு முன்னேறியது. பாவம்! இஃபாரா! இனி அவளிடம் இருப்பதெல்லாம் அந்த வழுவழு கூழாங்கல்தான். அதையும் கீழே போட்டுவிட்டுச் செய்வதறியாது நின்ருள். அடுத்த விநாடி அந்தக் கூழாங்கல் மளமளவென்று பெரிய மலையாக வளர்ந்தது. அதன் உச்சியிலே அவள் இருந்தாள். எவ்வளவு பெரிய மலை அது? அதன் பக்கங்கள் வழுவழுவென்றிருந்தன. யாராலும் அதைப் பற்றி ஏறி வர முடியாது.

இட்ரிமோப் அந்த வழுவழுப் பாறையில் தன் வலிமை மிக்க வாலினால் வெட்டிப் படிகளை உண்டாக்கிக் கொண்டு அதன் மீது ஏறலாயிற்று. ஆனால் அதிக தூரம் ஏற முடியவில்லை. அதன் வாலின் முனை மழுங்கியது. பாறையை வெட்டிப் பாதை அமைக்க முடியவில்லை. ''இஃபாரா! ஒரு கை கொடுத்து என்னைத் தூக்கு. நான் உன்னைத் துன்புறுத்த மாட்டேன்..... என்னை நம்பு'' என்று கெஞ்சியது இட்ரிமோப்.

''உன் கையில் இருக்கும் ஈட்டியைக் கீழே போடு'' என்றாள் இஃபாரா. அந்த அரக்க மிருகமும் கீழே இறங்கித் தன் கையிலிருந்த ஈட்டியை அதன் பலமான கைப்பிடி பூமியில் பதியக் குத்தி வைத்தது. கூரான முனை ஆகாயத்தை நோக்கியபடி ஈட்டி குத்திட்டு நின்றது. மடகாஸ்கர் மக்கள் தங்கள் ஈட்டிகளை இம்முறையில்தான் பூமியில் குத்தி வைப்பார்கள். இஃபாரா ஒரு கயிற்றை மேலிருந்து கீழே அனுப்பினாள். அக்கொடிய மிருகம் அதைப் பற்றிக் கொண்டு மேலே ஏறியது. அந்த வழுக்குப் பாறையின் உச்சியைச் சமீபித்ததும், ''இஃபாரா! நான் உன்னைக் கடைசியில் பிடித்துவிட்டேன். எத்தனை ருசியாய் இருப்பாய் நீ!'' என்றது. அவ்வளவுதான் இஃபாரா தான் பற்றி இருந்த கயிற்றை அப்படியே நழுவவிட்டாள். இட்ரிமோப் மலை உச்சியிலிருந்து தலைகுப்புறக் கீழே விழுந்தது. எங்கே? அது பூமியில் நட்டுவிட்டு வந்ததே ஈட்டி, அதன் முனை மீது. என்ன ஆகி இருக்கும்? கழுவில் ஏற்றப்பட்ட அந்தக் கெட்ட அரக்கன் செத்து ஒழிந்தது.

மலை உச்சியிலிருந்த இஃபாரா எப்படிக் கீழே இறங்கினாள்? பறவைகளின் கூட்டம் ஒன்று வந்தது. அவள் ஆடையை அவற்றின் அலகினால் பற்றிக் கொண்டு பறந்தபடி கீழே கொண்டு வந்து இறக்கின. இஃபாரா தன் வீட்டுக்குப் போனாள். நடந்ததைத் தன் பெற்றோர்களிடம் கூறினாள். மூத்த சகோதரிகள் இருவரையும் பெற்றோர் வீட்டை விட்டு வெளியே விரட்டியடித்தார்கள்.

'' எங்கள் இஃபாராவுக்கு முன்னைவிட மூன்று பங்கு அதிகமாகப் பரிசம் கிடைக்குமாக்கும். தகுந்த மணமகனுக்காகக் காத்திருக்கிறோம். அவனும் விரைவிலேயே வருவான். ஏனென்றால் எங்கள் இஃபாரா அத்தனை அழகு'' என்று பெருமையால் பூரித்துப் போயிருக்கிறார்கள் அவள் பெற்றோர்.

ஜடவாயு என்றால் என்ன?

நைட்ரஜன் என்று கேள்விப்பட்டிருப்பீர்களே. இந்த நைட்ரஜனுக்குத் தான் ஜடவாயு என்று பெயர். உலகில் உயிர் வாழும் எல்லா ஜீவராசிகளும் தங்கள்வரை ஏதாவது ஒரு முறையில் இந்த ஜடவாயுவைத் தேடி அலேகின்றன. மனிதன், தாவரம், பிராணி—இவற்றின் உடல் வளர்ச்சியில் அத்தியாவசியப் பங்கு வகிக்கிறது இந்த நைட்ரஜன். மனிதனின் உடல் வளர்ச்சிக்கு முக்கியமான புரோடீனில் உள்ள முக்கியப் பொருள் இந்த நைட்ரஜன்தான். இந்தப் பொருள் இல்லாவிடில் மனித உடலில் வளர்ச்சி இருக்காது. பழுதடைந்த, நாசமாக்கப்பட்ட திசுக்கள் மறுபடியும் தனது ஆரோக்கிய நிலையை அடைய வேண்டுமானல் அதற்கு நைட்ரஜன் தேவை.

நாம் சுவாசிக்கும் காற்றில் நூற்றுக்கு எழுபத்தெட்டு பாகம் நைட்ரஜன்தான் இருக்கிறது. பிராணவாயு இருபத்தொரு பாகம்தான். பூமியின் மேல் பரப்பில் உள்ள காற்றில் ஒரு சதுர மைலில் 20,000,000 டன்கள் நைட்ரஜன் இருக்கிறது. இது நிறமற்றது, வாசனையற்றது, ருசி இல்லாதது. நீரில் மிகக் குறைவாகவே கலக்கக் கூடியது. மிகமிக அதிகமான அழுத்தமும் குளிர்ச்சியும் தரப்பட்டால் இந்த வாயு திரவமாக மாறும். 218 ஸெண்டிகிரேடில் இந்த வாயுவைத் திரவமாக்கலாம்.

காற்றில் முக்கால் பங்கு உள்ள இந்த நைட்ரஜனை வாழும் ஜீவராசிகள் சுலபத்தில் எடுத்துக் கொள்ளலாமே என்று நினைக்கலாம். ஆனல் நடைமுறையில்

கரி என்றால் என்ன?

வாழ்க்கைக்கு மிக முக்கியமான பொருள்களில் ஒன்று கரி. எல்லாப் பொருள்களிலும் கரி ஒரு சத வீதத்துக்கும் குறைவாகவாவது இருக்கிறது. வாழும் அல்லது வாழ்ந்த எல்லாப் பொருள்களிலுமே இந்தப் பொருள் இருக்கிறது. உயிர் வாழும் எல்லா ஜீவராசிகளின் உடலும் கரியின் கலவைப் பொருள்களால் ஆனதுதான். தாவரங்கள் காற்றிலுள்ள கரியமில வாயுவிலிருந்து கரியைப் பிரித்து எடுத்து உணவு தயாரித்துக் கொள்ளுகின்றன. மிருகங்கள் இந்தத் தாவரங்களை உணவாகக் கொள்ளுவதன் மூலம் கரியைப் பெறுகின்றன. இதே வேளையில் மிருகங்கள் சுவாசிப்பதனுல் கரியமிலவாயு மறுபடியும் காற்றுக்கு வருகிறது.

கரியின் பல்வேறு அமைப்புக்களில், மிகவும் புகழ் பெற்றதும், மனிதனுல் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதுமான ஒன்று நிலக்கரி. நிலக்கரியில் ஐந்தில் நான்கு பாகம் கரியும் மற்ற ஒரு பாகத்தில் ஜலவாயுவும் மற்றப் பொருள்களும் அடங்கி யிருக்கின்றன. காந்தத்துக்கும் இரும்புக்கும் உள்ள கவர்ச்சியைப் போன்றது கரிக்கும் பிராணவாயுவுக்கும் உள்ள நெருக்கம். இதனுல்தான் நிலக்கரிக்கு மதிப்பு அதிகம். நிலக்கரியை எரித்தால், அதன் ஆதாரப் பொருள்கள் முக்கியமாக அதன் கரி எரிகிறது. அதாவது காற்றிலுள்ள பிராணவாயுவோடு எளிதில் கலக்கிறது. இந்தக் கலப்பினுல் உஷ்ண சக்தி பிறக்கிறது. இந்தச் சக்தியை மனிதன் பல விதங்களில் பயன்படுத்துகிருன்.

புதைமணல் என்றால் என்ன?

நீண்டநெடுங் காலமாகவே புதை மணல் பற்றி மனிதன் பீதி கொண்டிருந்திருக்கிருன். மனிதர்களைத் தன்னுள் இழுத்துக்கொண்டு விடும் பயங்கரமான மர்மம் நிறைந்த இடங்கள் இந்தப் புதை மணல் பகுதிகள் என்று நம்பிக்கை இன்றும் நிலவி வருகிறது. ஆனல் புதை மணலுக்கு இந்தக் கற்பனைக் கதைகளைப் போன்ற மர்ம சக்தி ஏதும் கிடையாது.

புதை மணல் என்பது என்ன? இலேசான, அடர்த்தி இல்லாத, நீர் கலந்த மணல் பகுதிதான் இது. புதை மணல் பகுதிக்கு அருகிலுள்ள மணலுக்கும் இதற்கும் எவ்வித வேற்றுமையும் கிடையாது. ஆனல் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் இந்தப் பகுதி மாறுபட்டிருக்கும். இப்பகுதியினுல் தன்மீது கனமான பொருள்களைத் தாங்கிக்கொள்ள முடியாது.

புதை மணல் பகுதிகள் அநேகமாகப் பெரிய நதிகளின் முகத்துவாரப் பகுதியிலும் சமதரையான படுகைகளிலும் காணப்படும். இப்பகுதிகளின் கீழே கெட்டியான களிமண் அடுக்குகள் இருக்கும். இப்பகுதிகளில் நீர் பூமியில் உறிஞ்சப்படாமல் தங்கியிருக்கும். களிமண் தண்ணீரை உறிஞ்ச விடுவதில்லை. மேலே பார்த்தால் காய்ந்த மணல் போலிருக்கும். ஆனல் நீரோட்டத்தின் தண்ணீரைக் களிமண் தனக்குக் கீழே வாங்கிக் கொள்ளாததால் அப்படியே மணலுக்கு அடியில் இருக்கும்.

புதைமணல் பகுதியின் மணல் துகளின் பக்கங்கள் வழுவழுப்பாக உருண்டையாக இருக்கும். தண்ணீர் இந்த மணல்

இது சாத்தியமல்ல. 'லெகூம்ஸ்' Legumes என்ற ஒருவகைத் தாவரங்கள் மட்டுமே காற்றில் உள்ள நைட்ரஜனை நேரடியாகக் கிரகிக்கும் குணமுடையவை. மனித உடல் நைட்ரஜனை நேரடியாக ஏற்க முடியாது. நமக்கு வேண்டிய நைட்ரஜன் நாம் புரோடீன்களை உட்கொள்வதால்தான் அடைய முடியும். இந்தப் புரோடீன்கள் சில தாவரங்களை உட்கொள்வதாலும், தாவரங்களை உண்ணும் பிராணிகளை நாம் உணவாகக் கொள்ளுவதினாலுமே பெற முடியும்.

நாம் சுவாசிக்கும்போது காற்றுடன் இந்த நைட்ரஜனும் நம் சுவாசப் பைக்குள் போகிறது. ஆனால் எவ்வித மாறுதலுமின்றி இது மறுபடியும் வெளிவந்து விடுகிறது. காற்றில் இருக்கும் நைட்ரஜனின் வேலை என்ன? பிராணவாயுவின் வீர்யத்தைக் குறைப்பதுதான் இதன் காரியம். ஒரே சீரான அளவில் நாம் பிராணவாயுவைச் சுவாசிக்கச் செய்வது இந்த நைட்ரஜன்தான்.

வேறு ரசாயனப் பொருள்களுடன் கலந்து புதிய கலப்புப் பொருளாகும்



போதுதான் நைட்ரஜன் உபயோகமுள்ளதாகிறது. ரசாயன மாற்றத்துக்கு இசைவற்ற இது, மற்றப் பொருள்களோடு சுலபத்தில் கலந்து விடுவதில்லை.

கரி பல்வேறு மாறுபட்ட அமைப்புக்களில் கிடைக்கிறது. இவைகளில் முக்கியமான இரு உருவங்கள் கிராபைட்டும், வைரமும். கிராபைட் என்ற கரி மிருதுவாகவும் வழுவழுப்பாகவும் இருக்கும். யந்திரங்களில் தேய்மானத்தைத் தவிர்க்கும் 'லூப்ரிகண்ட்' ஆக இதைப் பயன்படுத்துகிறார்கள். களிமண்ணுடன் இந்தக் கிராபைட்டைக் கலந்து கெட்டிப்படுத்தினால் அப்போது கிடைப்பது நீங்கள் எழுதும் காகிதப் பென்சிலின் எழுது முனையான 'லெட்'. பொருள்களிலேயே உறுதியான வைரம் ஒரு கரி. கரியின் அணுக்கள் ஒன்றோடொன்று இணையக் கூடியவை. பல்வேறு வழிகளில் பல்வேறு பொருள்களுடன் கலந்து புதிய கரிக் கலவைப் பொருள்களை உண்டாக்கும் குணம் கரிக்கு உண்டு. மிக எளிய கலவை கரியமில வாயு. கரி காற்றில் எரியும்போது பிராணவாயுடன் கலந்து கரியமில வாயுவாகிறது. மிகக் குறைவான பிராண வாயுவுடன் கலந்து எரியும்போது ஏற்படும் வாயுவுக்குக் 'கார்பன் மானாக்ஸைடு'



என்று பெயர். இது ஒரு விஷ வாயு. கரி மற்ற ஆதாரப் பொருள்களோடோ, கலவைகளோடோ சுலபத்தில் கலந்து விடாது. மிக உயர்ந்த வெப்ப நிலையில் மட்டுமே சகஜமாகக் கலக்கும் குணம் உடையது கரி.

துகளின் இடையே புகுந்து அவைகளைப் பிரித்து மேலே தூக்கிவிடும். ஒன்றன் மீது ஒன்றாக இம்மணல் துகள்கள் மிதந்த படி இருப்பதினால் கனமான பொருள்களை இம்மணல் தாங்க முடிவதில்லை.

புதை மணலில் மனிதன் கால் வைத்ததும் திடீரென்று அமிழ்ந்து மறைந்து போய்விட மாட்டான். இதன் அடியில் திரவப் பொருளான நீர் இருப்பதால் அதில் மிதக்க முடியும். நீரை விடப் புதை மணல் கனமாதலால் நாம் நீரில் மிதக்க முடிவதைப் போலவே இதிலும் மூழ்கிவிடாமல் மிதக்க முடியும். ஆனால் நிதானம் வேண்டும். புதை மணலில் சிக்கியதும் பீதியடையாமல் உடலை மெல்ல மெல்ல அசைத்துச் செயல்படவேண்டும். மணல் துகள்கள் நம் உடலைச் சுற்றிச் சூழ்ந்து கொள்ள அவகாசம் அளித்தால் நீரில் நீந்துவது போலவே இதிலும் நீந்தி வெளியேறி விட முடியும். புதை மணல் என்ற



பீதியும், அதனால் ஏற்படும் பரபரப்பில் செங்குத்தாக நின்று செயல்படுவதுமே அபாயத்துக்குக் காரணம். புதைமணல் பகுதியில் உடலைப் படுத்த நிலைக்குக் கொண்டு வந்து நிதானமாக நீந்த முயன்றால் ஆபத்து ஏற்படாது.


துணிக்கடைக்காரர் கண்ட மர்ம உலகம்

உங்களிடம் அளவுகோல் (ஸ்கேல்) இருக்குமே. அதில் ஓர் அங்குலத்தைப் பத்துப் பாகமாக்கிக் கோடு போட்டிருக்குமில்லையா? ஓர் அங்குலத்தில் பத்தில் ஒரு பாகத்தை நூறு பாகமாக்கினால் அது எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். விஞ்ஞானப் பாடத்தில் பாக்டீரியாக் கிருமிகளைப் பற்றிப் படித்திருப்பீர்களே, ஓர் அங்குலத்தை ஆயிரம் பாகமாக்கினால் எவ்வளவு இருக்குமோ அதையும் விடச் சிறியவை இந்தக் கிருமிகள். இந்தப் பாக்டீரியாக்கள் எங்கும் நிறைந்திருக்கின்றன. காற்றில், உணவில், தாவரங்களில், பழங்களில், பாலில், நீரில். இவைகளில் பல நமக்கு நன்மை செய்கின்றன. சில கெடுதலை விளைவிக்கின்றன. கண்ணுக்கே புலப்படாத கிருமிகளில் பெரியவைகளைப் **பாக்டீரியா** என்பார்கள். அதிலும் மிக நுண்ணியவைகளுக்கு **வைரஸ்** என்று பெயர்.

இந்தப் பாக்டீரியாக்களைப் பற்றி மனிதன் எப்படி அறிந்தான்? அவ்வளவு நுண்ணிய கிருமிகளை அவன் எதன் உதவியால் கண்டான்? சூட்ச தரிசினி என்ற **'மைக்ராஸ்கோப்'** கருவியினால் தான் மனிதன் பாக்டீரியாக்களைக் கண்டான். இந்த மைக்ராஸ்கோப் கருவியை முதன் முதலில் உருவாக்கியது யார்? இதை உருவாக்கியவர் பெரிய ஆராய்ச்சியாளரா? விஞ்ஞானியா? அறிவியல் மேதையா? இல்லை. மைக்ராஸ்கோப் கருவியைக் கண்டவர் அதிகம் படிக்காதவர். பொழுது போக்காகக் கண்ணாடித் துண்டுகளைக் கடைசல் பிடித்து விதவிதமான லென்ஸ்களைத் தயாரித்தார். இவர் ஒரு துணி வியாபாரி. 'இன்று விஞ்ஞானிகளுக்கும், மருத்துவர்களுக்கும் மற்றும் பல ஆராய்ச்சியாளர்களுக்கும் இன்றியமையாததாக விளங்கும் சூட்சமதரிசினியைக் கண்டவர் இவரா?' என்று வியப்பாக இருக்கிறதல்லவா? அதுமட்டுமல்ல, அவர் இதைக் கண்டுபிடித்து அமைத்த கதை இன்னும் சுவாரசியமானது.

ஆண்டன் வான் லீவன்ஹூக் என்பவர் ஒரு துணி வியாபாரி. படிப்புக் கொஞ்சம் தான். ஆனால் அவர் ஒரு புதிய உலகத்தையே கண்டுபிடித்தார். கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்த அதிசயத்தைவிட இவர் கண்ட உலகம் அற்புதமானது. இவருடைய பொழுது போக்கு கண்ணாடிகளைக் கடைசல் பிடித்து லென்ஸ்கள் தயாரிப்பது. ஒரு நாள் இப்படித் தான் தயாரித்த லென்ஸ் வழியாகத் தேங்கி நின்ற குட்டை நீரில் ஒரு துளியை எடுத்துப் பார்த்தார். அவர் விழிகள் வியப்பால் பிதுங்கின. இதுவரை யாரும் கண்டிராத, கற்பனை கூடச் செய்திருக்க முடியாத காட்சிகளை அதில் கண்டார். சின்னச் சின்ன ஜீவராசிகள், (மிருகங்கள் என்று அவர் அப்போது குறிப்பிட்டார்.) சாதாரண ஊனக் கண்களால் காண முடியாதவை அந்தத் துளி நீரில் நீந்தின, உணவருந்தின, பிறந்தன, இறந்தன, ஒன்றோடொன்று சண்டை போட்டுக்கொண்டன. அத்தனையும் அந்த ஒரு சொட்டு நீரில். அதுவே அவைகளின் உலகமாக இருந்தது. அதிசயத்திலும் அதிசயமில்லையா இது? விஞ்ஞானிகளுக்கு லென்ஸ் பற்றித் தெரிந்திருந்தது. ஆனால் அதை வான் லீவன்ஹூக் பயன்படுத்தியதைப் போலப் பயன்படுத்தவில்லை. கண்ணுக்குத் தெரியும் சிறிய பொருள்களைப் பெரிதாக்கிப் பார்க்கவும் தூரத்தில் உள்ள பொருள்களை அருகே வரச் செய்து காணவுமே லென்ஸ்களைப் பயன்படுத்தி வந்தனர். ஆனால் வான் லீவன்ஹூக்கோ?...

லீவன்ஹூக் ஹாலந்து தேசத்தில் உள்ள டெல்ட் நகரில் 1632ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ந் தேதி பிறந்தார். தொண்ணூறு ஆண்டுகள் வாழ்ந்த இவர், தாம் பிறந்த இடத்தை



விட்டு நகரவே இல்லை. வாழநாளெல்லாம் இங்கேயே வாழ்ந்தார். பதினாறு வயதிலேயே பள்ளிப் படிப்புக்கு 'குட்பை' கூறிவிட்டவர் இவர். தகப்பனார் இறந்ததும் ஒரு கடையில் குமாஸ்தாவாக வேலைக்கு அமர்ந்தார். இதன் பிறகு டெல்ட் நகர மன்றத்தில் ஜானிட்டர் (காவல்காரர்) ஆனார். ஒரு துணிக் கடையையும் நடத்தி வந்தார் லீவன் ஹாக்.

கண்ணாடிகளைத் தக்கபடி சாணை பிடித்து அற்புதமான லென்ஸ்களைத் தயாரிப்பது இவரது பொழுதுபோக்கு. கடையின் அலுவல் நேரம் முடிந்ததும் கடைக்குப் பின்னால் உள்ள தம் அறைக்குப் போய் லென்ஸ்களைத் தயாரிப்பார். மிகச் சக்தி வாய்ந்த அற்புதமான லென்ஸ்களைத் தயாரித்தார் லீவன் ஹாக். இந்த லென்ஸ்களை, தாமிரம், வெள்ளி, தங்கத் தகடுகளில் பதிப்பார். ஏதாவது ஒரு பொருளை லென்ஸின் ஒரு பக்கத்தில் பொருத்தி மறு பக்கத்து வழியாக அதை மணிக் கணக்காகப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருப்பார். இப்படித் தாம் பார்க்கும் அந்தப் பொருளை அதே நிலையில் பல மாதங்கள் வரையோ அல்லது நிரந்தரமாகவோ நிறுவி வைத்து விடுவார். வேறு பொருளைக் காண வேண்டுமானால் வேறொரு லென்ஸைத் தயாரித்துக் கொள்வார். இப்படி இவர் தம் வாழ்நாளில் 419 லென்ஸ்களைத் தயாரித்திருக்கிறார்.

நமது இந்த அற்புத லென்ஸ்கள் மூலமாக, அவர் காணாத பொருள்களில்லை.



பூச்சிகள், அழுக்கு நீர்த்துளி, பல் இடுக்கில் உள்ள அழுக்கு, இறைச்சித் துண்டு, தலை முடி, விதைகள், எலும்பு — இப்படி எதைக் கண்டாலும் அவைகளைத் தம் லென்ஸ் மூலம் கண்டு அதில் தெரியும் காட்சிகளை மிக உன்னிப்பாக ஆராய்ந்து மிக மிக நுணுக்கமாக அவைகளைப் பற்றிய விளக்கங்களை எழுதுவார்.

1665ம் ஆண்டு வான் லீவன்ஹாக் மயிரிழைபோன்ற ரத்தக் குழாய்களான தந்துகிகளைத் தம் லென்ஸ் மூலம் பார்த்தார். சுத்த ரத்தக் குழாய் (தமனி)களோடும், அசுத்த ரத்தக் குழாய் (சிரை)களோடும் தந்துகிகள் இணைவதை, நான்கு ஆண்டுகளுக்கு முன்புதான் ஓர் இத்தாலிய விஞ்ஞானி கண்டிருந்தார். ஆனால் இந்த நுண்ணிய குழாய்கள் மூலம் ரத்தம் பாய்ந்து செல்வதைக் கண்டவர் லீவன் ஹாக்தான். 1674ல் ரத்தத்துக்குச் சிவப்பு நிறத்தைக் கொடுக்கும் சிவப்பு அணுக்களை (ரெட் கார்ப்பஸல்ஸ்) கண்டார்.

1683ம் ஆண்டில் உலகுக்கு மிக மிக முக்கியமான ஒன்றைக் கண்டுபிடித்தார் லீவன்ஹாக். அதுதான் பாக்டீரியா. இவருடைய லென்ஸ்கள் இதை மிகப் பெரிதாக்கிக் காட்ட முடியவில்லைதான். தாம் கண்டவை பாக்டீரியாக்கள் என்பதும் அவருக்கோ அல்லது மற்றவர்களுக்கோ அப்போது தெரியாது. அந்த அளவுக்கு அவர் அறிவாளியோ, ஆராய்ச்சியாளரோ இல்லையே.

லென்ஸ்களைக் கடைசல் பிடிக்காத போதும், பொருள்களை அதன் மூலம் காணாத போதும் தாம் கண்ட அதிசயக் காட்சிகளைப் பற்றி விவரமாகக் குறிப்பெழுதுவார். இப்படி இவர் எழுதிய சில குறிப்புக்களைப் பாருங்கள். ஒரு துளி நீரைத் தம் அற்புத லென்ஸ் மூலம் கண்டதை இப்படி எழுதுகிறார். ''சின்னச் சின்ன மிருகங்கள். மிக மிகச் சிறியவை — இவைகளில் நூறு பிராணிகளை ஒன்றன் அருகே ஒன்றாக வைத்தாலும்கூட ஒரு சிறு மணல் துகளின் அளவுக்குக்கூட வரமாட்டா. இம்மாதிரி 10,00,000 பிராணிகளை அருகருகே வைத்தால் ஒரு வேளை ஒரு பெரிய மணல் துகளுக்குச் சமமாகலாமோ என்னவோ? அந்தத் துளி நீர் முழுவதும் உயிருள்ள இப்பிராணிகளினால் நிறைந்திருக்கிறது. நான் கண்ட பல அதிசயங்களில் இது அதியற்புதமான காட்சியாகும்.

''என் வீட்டுக்குக் கௌரவமிக்க பல பெண்கள் வந்திருந்

தார்கள். அவர்களுக்குக் காடியிலிருந்து ஒரு துளி (புளித்த சாராயம்) எடுத்து எனது லென்ஸ் மூலம் அதைக் காணச் செய்தேன். அதில் ஏராளமான மிருகங்கள் நீந்துவதைக் கண்ட அவர்கள், 'இனி தாங்கள் காடியையே தொடப் போவதில்லை'' என்று சபதம் செய்து கொண்டார்கள்.

லீவன்ஹூக் தாம் கண்டவற்றை ரகசியமாக வைத்துக் கொள்ளவில்லை. 1660 ல் விஞ்ஞானத்தில் ஈடுபாடு கொண்ட ஆங்கிலேயர் பலர் ஒன்று சேர்ந்து லண்டனில் ஓர் ஆராய்ச்சிக் கழகத்தை நிறுவி இருந்தார்கள். இதற்கு இங்கிலாந்தின் மன்னர் இரண்டாம் சார்லஸ் ஊக்கமளித்தார். ராயல் கழகம் என்று இதைச் சுருக்கமாக அழைத்தார்கள். இக்கழகத்துக்கு லீவன்ஹூக் தம் கண்டுபிடிப்புக்களைப் பற்றிய குறிப்புக்களை அனுப்பினார். தாம் தயாரிக்கும் லென்ஸ்களையும் அதன் மூலம் தாம் கண்ட அற்புதங்களையும் அக்கட்டுரைகளில் அவர் விளக்கி இருந்தார். இதைப் படித்த கழகத்தினர் வியப்படைந்தனர். ஆனால் ஒரு சாதாரண துணிக் கடை வியாபாரியின் தகவல் என்பதினாலோ என்னவோ அதை அவர்கள் நம்பவில்லை. இருந்தாலும் அக்கழகத்தில் ராபர்ட் ஹூக் என்று ஒரு விஞ்ஞானி இருந்தார். இவர் வான் லீவன்ஹூக்கின் குறிப்புக்களின் படி மைக்ராஸ்கோப் ஒன்றைத் தயாரித்தார். இவர் தயாரித்தது இன்று நாம் காணுவது போன்று இரண்டு லென்ஸ்களை ஒரு குழாயில் அமைத்து அதை முன்னும் பின்னும் நகர்த்தக்கூடியதாக இருந்தது. ஹூக் முறையான மைக்ராஸ்கோப்பைக் கண்டுபிடித்தவராக இருந்தாலும் அதற்கான கருவைக் கண்டவர் வான் லீவன்ஹூக்தானே? ராபர்ட் ஹூக் தாம் அமைத்த மைக்ராஸ்கோப் மூலம் பொருள்களைப் பார்த்தபோது, லீவன்ஹூக் தம் கட்டுரைகளில் கூறியிருந்தபடியே இருப்பதைக் கண்டார். இதன் பிறகே ராயல் கழகத்தினர் வான் லீவன்ஹூக்கின் கூற்றை நம்பினார்கள். தாம் உருவாக்கிய இருபத்தாறு மைக்ராஸ்கோப்புக்களைக் கழகத்துக்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்தார் லீவன்ஹூக். அவைகளில் உள்ள அதிசயங்களைக் கழகத்து ஆராய்ச்சியாளர்கள் கண்டு மகிழ்ந்தார்கள்.

1680ம் ஆண்டில் வான் லீவன்ஹூக் ராயல் கழகத்தில் ஓர் உறுப்பினராக்கப்பட்டார். வேற்று நாட்டவரான, அதிகம் படிப்பில்லாத ஒரு துணிக் கடை வியாபாரியைக் கழகம் தம் அங்கத்தினராக்கிக் கொண்டதென்றால் லீவன்ஹூக்கின் சலியாத உழைப்பே அதற்குக் காரணம். தம் வாழ்நாளில் 375 விஞ்ஞானக் கட்டுரைகளை ராயல் கழகத்துக்கும், இருபத்தேழு கட்டுரைகளைப் பிரஞ்சு அகாதமி ஆஃப் சயன்ஸ் கழகத்துக்கும் அனுப்பி வைத்தார். ஆனால் தம் ஊரான டெல்டை விட்டு வெளியேறவே இல்லை இவர். டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி ஆசியாவிலிருந்து பூச்சிகளை இவருக்கு அனுப்பி வைத்தது — இவரது அற்புத லென்ஸ்களின் கீழிருந்து ஆராய்ச்சி செய்யப்படுவதற்காக. இங்கிலாந்தின் ராணி இவரது அதிசய லென்ஸ்கள் காட்டும் அற்புதத்தைக் காண இவர் வீட்டுக்கே வருகை தந்தார்.

ரஷ்யாவின் மன்னரான மகாபீட்டர் ஹாலந்துக்கு வந்திருந்தார், கப்பல் கட்டும் கலையைக் கற்றுக் கொள்ளுவதற்காக. அப்போது, தம் மரியாதையைச் செலுத்துவதற்கு வான் லீவன்ஹூக்கின் இருப்பிடம் தேடி வந்தார் ரஷ்யாவின் ஜார் பீட்டர்.

இவர்களுக்கெல்லாம் லீவன்ஹூக் தம் அற்புதக் கண்ணாடி லென்ஸ்களின் மூலம் கிருமி உலகைக் காண்பித்தாரா? மன்னரும் மகாராணியுமானதினால் — மறுக்காமல் காண்பித்தார். ஆனால் வழக்கமாக அவர் யாருக்கும் தம் கண்டு பிடிப்புக்களைக் காட்டுவதில்லை.

சாதாரணக் கண்ணாடியை, நுண்ணிய துகள்களைப் பூதாகாரமாக்கிக் காட்டும் லென்ஸ்களாக எப்படி மாற்றுகிறார் என்பதை இவர் யாருக்கும் விளக்க விரும்பவில்லை. இதை ஒரு ரகசியமாகவே வைத்திருந்தார். தம் மைக்ராஸ்கோப்புக்களை இவர் விற்பதும் இல்லை. இன்றைய நவீன மைக்ராஸ்கோப்பை உருவாக்கியது வான்லீவன்ஹூக்காக இல்லாதிருக்கலாம். ஆனால் இம்மாதிரி ஒரு கருவியை எப்படி அமைக்கலாம்? அதன் மூலம் இவைகளைக் காணலாம் என்று அறிவித்தவர் இவர்தான். ஜீவ நூலை ஆராய்வதற்குத் தனி மனிதராக இருந்து வழிவகுத்தவர் லீவன்ஹூக்தான். பாக்டீரியாக்களைப் பற்றிப் பிற்காலத்தில் விரிவாக ஆராய்வதற்கு லீவன்ஹூக்தான் வழிகாட்டினார். அவர் கண்ணாடித் துண்டுகளைச் சாணை பிடித்து லென்ஸ்களாக்காவிட்டால் இன்றைய நவீன மருத்துவக் கலை இருள் சூழ்ந்த உலகமாகத்தான் இருந்திருக்கும்.

— வருண்டு

ஒளியும் ஒலியும்

"கரி"

ஒளியின் ஒலியின் தன்மையினை
உணர்ந்து கொள்வீர் சிறுவர்காள்!
தெளிவாய் அறிந்து கொள்வீரே!
தெரிந்து பயனும் பெறுவீரே!

ஒளியைக் கண்டு களிக்கின்றோம்;
ஒலியைக் கேட்டு மகிழ்கின்றோம்.
ஒளியில் ஏழு நிறமுண்டு
ஒலியில் நாத பேதமுண்டு.

அலையாய் இரண்டும் அலைந்திடுமாம்
அழியா தென்றும் இருந்திடுமாம்
இலையாம் ஒலிக்கு ஒளிவேகம்
இடிமின் னலாலே தெளிவாகும்.

முந்திப் பாய்ந்து இடிதனையே
மின்னல் தோன்றி ஒளிருதுகாண்!
முந்தி யெழுந்த இடியலையோ
பிந்தி வந்தே ஒலிப்பது கேள்!

ஒளியைத் தடுத்தால் நிழல்விழுமே
ஒலியோ கடந்து சென்றிடுமே
ஒலியால் ஆனால் சூனியத்தை
ஊடுரு வத்தான் இயலாதே!


சக்தி உண்டாம் இரண்டுக்கும்
சந்த யமின்றி உணர்ந்திடுவாய்
சக்தி யொன்றை மற்றொன்றாய்ச்
சரியாய் மாற்ற முடியுங்காண்!


குழலும் யாழும் மத்தளமும்
கொஞ்சும் இசைக்குக் கருவிகளாம்
நிழல்ப·டங்கள் பிடிப்பதற்கு
நமக்குத் தேவை நல்லொளியாம்.

இயற்கை ஒளியைக் கதிரவனே
ஈந்து உலகைக் காக்கின்றான்
செயற்கை ஒளியை மின்சாரம்
தந்து விந்தை செய்திடுமே!

உயிர்கள் தழைக்க ஒளிவேண்டும்
உலகம் பிழைக்க ஒளிவேண்டும்
உயிர்கள் மகிழ்ந்து இன்பமுற
ஒலியால் இனிய இசைவேண்டும்.

ஒளியை ஒலியை ஓங்கார
உருவன் ஒருவன் தருகின்றான்
தெளிந்து நீங்கா அருட்கடலை
தொழுது நாமும் பணிவோமே!






17
ஷீலாவைக் காணோம்!
கதை வாண்டுமாமா
சித்திரம் ரமணி..
ஷீலாவைக் கரையேற்றிய கயவர்கள் மீது பாய்ந்தது டைகர்..
இந்தச் சனியன் ஆற்று வெள்ளத்தோடு போய் விட்டதென்றல்லவா நினைத்தேன்..
இன்றோடு நீ ஒழிந்தாய். ஒரே போடு.. இந்தா..
இதுதான் உன் டைகரின் கடைசி கத்தலாக இருக்கும். ஒழிந்தது பீடை
ஐயோ, என் அருமை டைகர்.
ஐயோ, பாவிகளா! என் டைகரைக் கொன்று விட்டீர்களே.
கூச்சல் போடாமல் வா பொண்ணு அந்த நாயும் நீயும் சேர்ந்து எங்களை என்ன பாடு படுத்திட்டீங்க. ம்... நட.
மலைப் பிரதேசத்திலிருந்து போலீஸ் தகவல் கொடுத்ததும் கங்காராம் ஹெலிகாப்டரிலேயே கிளம்பி விட்டா மகளைத் தேடி...
அவர்களைத் தப்ப விடமாட்டோ
அதோ, அதோ. இரண்டு பேர் ஒரு பெண் குழந்தையை இழுத்துக்கொண்டு போகிறார்கள். அது என் மகள் ஷீலாதானா?


அதிகாரிகளும்...
நாம இப்படிப் போயி அவங்க வந்த ஹெலிகாப்டரிலேயே தப்பி விடலாம். எனக்கு அதை ஓட்டத் தெரியும்.
தேடித்தான் வந்திருக்குப் போலே..
ஷீலாவின் வாயைக் கட்டித் தோளில் போட்டுக் கொண்டு இருவரும் தனித்து விடப்பட்டுள்ள ஹெலிகாப்டர் விமானத்தை நோக்கி ஓடினார்கள். மயக்கம் தெளிந்த டைகரும் இவர்களைத் தொடர்ந்தது.
ஹெலிகாப்டர் 'ஜிவ்'வென்று மேலே கிளம்பிய அதே தருணத்தில் டைகரும் 'கப்'பென்று அதன் மீது தாவிப் பற்றிக் கொண்டது.
ஹெலிகாப்டரின் சக்கரத்தை இணைக்கும் கம்பிகளில் ஒன்றைக் கவ்விய படி ஊசலாடிக் கொண்டிருந்தது டைகர் ஆகாயத்தில்...
நமது விமானத்திலேயே தப்பி விட்டார்களே கொலைகாரர்கள். அந்த அருமை நாயின் கதி என்ன ஆகுமோ?

தொடரும்..

விளக்கெண்ணெய் வியாபாரி

கலையன்பன்



ஒருநாள் ஓர் எண்ணெய் வியாபாரி காட்டு மார்க்கத்திலுள்ள ஒற்றையடிப் பாதை வழியே போய்க் கொண்டிருந்தான். தலையில் ஒரு குடம் வைத்திருந்தான். அது நிறைய விளக்கெண்ணெய் இருந்தது. அதை விற்கும் பொருட்டே அந்த நீண்ட பாதை வழியே சென்று கொண்டிருந்தான்! வெகுதூரம் வந்தும் ஊர் எதுவும் அவன் கண்ணுக்குத் தென்படவில்லை. வானத்தில் மாசுமறுவின்றி வெய்யில் காய்ந்து கொண்டிருந்தது. ஓர் இடத்தில் பாதை அருகே ஒரு பெரிய ஆலமரம் நின்றது. அது பரந்து விரிந்து பல கிளைகளுடன் குளிர்ந்த நிழலைப் பரப்பிக் கொண்டிருந்தது. அதைக் கண்டதும் அதன் நிழலில் சற்று இளைப்பாறிவிட்டுச் செல்ல வேண்டும்போல் இருந்தது அவனுக்கு!

எண்ணெய்க் குடத்தைக் கீழே இறக்கி வைத்துவிட்டு ஆலமரத்தின் அடியில் உட்கார்ந்தான். ஆலமரத்தின் அடியில் ஒரு பக்கம் வெள்ளி நாணயங்கள் குவிந்து கிடந்தன. வியாபாரி சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தான். மனித சஞ்சாரமே அவன் கண்ணுக்குத் தென்படவில்லை. புதையல் பணம்தான் எப்படியோ வெளிக் கிளம்பியிருக்கிறது. இவ்வளவு பணமும் நமக்குச் சொந்தமானால் பெரிய பணக்காரன் என்று மதிப்புப் பெறலாம். ஊர் ஊராய் அலைந்து எண்ணெய் விற்றுப் பிச்சைக்காரப் பிழைப்பு நடத்திக் கஷ்டப்பட வேண்டாம் என்று கற்பனை உலகிலே அவன் மனம் சஞ்சரிக்க ஆரம்பித்தது.

பொருளை எப்படி எடுத்துச் செல்வது என்ற பிரச்னைக்கும் ஒரு முடிவு கண்டுவிட்டான் அவன். 'குடத்திலுள்ள எண்ணெயைக் கொட்டிக் கவிழ்த்துவிட்டுக் குடத்திலே அள்ளிப் போட்டுக் கொண்டு சென்றால் எவரும் சந்தேகப்பட முடியாது. நூறு ரூபாய் எண்ணெய் வீணாகப் போனாலும் போகட்டும். ஆயிரக் கணக்கான ரூபாய் கிடைக்கும்போது நூறு ரூபாய் எம்மாத்திரம்' என்று அவன் உள்ளம் மகிழ்ச்சி கொண்டது! அதே நேரத்தில் ஓர் அசரீரி வாக்குப் பிறந்தது.

''டேய், பணத்தை அள்ளாதே! இது மூளிக்காதானுடைய பணம்! மூளிக்காதானைத் தவிர இது வேறு எவருக்கும் சொந்தம் கிடையாது!'' என்று எச்சரித்துத் தடுத்தது. வியாபாரிக்குப் பணத்தின் மீது ஏற்பட்ட ஆசை கொஞ்சமும் தணியவில்லை.

''நான் ஏன் அந்த மூளிக்காதானாக இருக்க முடியாது?'' என்று திருப்பிக் கேட்டான்.

''நீ எப்படி மூளிக்காதனாக ஆக முடியும்?'' — அதுவும் திருப்பிக்கேட்டது.

'ஆயிரக்கணக்கான ரூபாய் கிடைக்கும் போது நாம் ஒரு காதை இழந்து விட்டால் என்ன? இந்த ஒரு காது போனால் நமக்கு என்ன நஷ்டம் வந்து விடப் போகிறது ! காலமெல்லாம் இருந்து சாப்பிடலாமே, இந்தப் பணம் கிடைத்தால்! என்று தன் மடியில் வைத்திருந்த கத்தியை எடுத்துத் தனது இடது காதை வெட்டித் தூர வீசி எறிந்துவிட்டு, ''இப்போது இந்தப் பணம் எனக்குத்தானே சொந்தம் ?'' என்று கேட்டான். அந்தக் கேள்விக்கு ஒரு பதிலும் வரவில்லை. 'இனி பணம் நமக்குத்தான் சொந்தம் என்பது உறுதியாகி விட்டது. மௌனம் சம்மதம் என்பதற்கு அத்தாட்சிதானே?' என்று தனக்குத் தானே பேசிக் கொண்டான். தான் செய்த தந்திர உபாயத்தின் பெருமையை எண்ணிப் பூரித்துப் போனான். துணிச்சலுடன் பணத்தை அள்ளிக் குடத்தை நிறைத்தான்.

இனி இங்கே நின்றால் நமக்கு ஆபத்து ஏற்பட்டாலும் ஏற்படலாம் என எண்ணி அவசரம் அவசரமாக அவ்விடத்தை விட்டு அகன்றான்.

'நேரமோ அந்தியாகிவிட்டது. பழைய படி வந்த பாதை வழியே சென்றால் நேரம் காணாது. இன்று அமாவாசை இருட்டு. இருட்டிலே சென்றால் எவனாவது பணத்தைப் பிடுங்கிக் கொண்டு போய் விடுவான். பக்கத்தில் ஏதோ ஊர் இருக்கும் அறிகுறி தெரிகிறது. அந்த ஊரில் இரவு மட்டும் தங்கிவிட்டுக் காலையில் எழுந்து புறப்பட்டால் நேரத்தோடு ஊர் போய்ச் சேர்ந்துவிடலாம்' என்று எண்ணிக் கொண்டே ஒற்றையடிப் பாதை வழியே சென்றான். கொஞ்ச தூரம் சென்றதும் இருட்டிவிட்டது. பக்கத்தில் ஓர் ஊர் இருப்பதன் அறிகுறியாக விளக்கொளி தெரிந்தது. அதை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தான். தலைச் சுமையோ கனத்தது. இன்னும் கொஞ்ச தூரம் கூட நடக்க முடியாது என்பதை உணர்ந்தான். ஊரின் அருகில் சென்றுவிட்டான். பக்கத்தில் இருந்த ஒரு வீட்டின் வாசலில் ஒரு நடுத்தர வயதான பெண் நின்று கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் ''அம்மா! நான் ஓர் எண்ணெய் வியாபாரி. இரவு மட்டும் இங்கே தங்கிச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஆகிவிட்டது. இடம் தந்து உதவினால் கோடி புண்ணியம். தங்க இடம் கிடைக்குமா அம்மா?'' என்று பணிவுடன் கேட்டான்.

''இந்த அகால வேளையில் ஒரு மனிதனுக்குத் தங்க இடம் கொடுக்கமாட்டோமா? நாங்களும் மனிதப் பிறவிகள் தானய்யா ! சும்மா வந்து தங்கிவிட்டுச் செல்லுங்கள். அதோடு இரவுக்கு ஒரு வேளை சாப்பாடும் தருகிறேன்!'' என்று அன்புடன் உபசரித்து வரவேற்றாள் அந்தப் பெண்.

ஊர் பேர் விசாரித்து முடிந்ததும் அறுசுவையுடன் சாப்பாடு போட்டாள். திருப்தியாகச் சாப்பிட்டுக் களைப்பாறிய வியாபாரிக்குத் தூக்கம் கண்ணைக் கட்டியது. வீட்டுக்காரப் பெண்மணியைக் கூப்பிட்டு, ''இந்தக் குடத்தில் விளக்கெண்ணெய் இருக்கிறது. இதைப் பத்திரமாக ஓர் இடத்தில் வைத்திருந்து காலையில் கொடுங்கள்'' என்று குடத்தைத் தூக்கி அந்தப் பெண்ணிடம் கொடுத்தான். குடத்தின் வாயில் துணியை வைத்து நன்றாகக் கட்டியிருந்தது. எண்ணெய்க் குடத்



தைப் பாதுகாப்பாக வைத்துவிட்ட பெருமிதத்தில் குறட்டை போட்டுத் தூங்க ஆரம்பித்தான் வியாபாரி.

இரண்டாம் சாமம் ஆரம்பத்தில் அந்த வீட்டுக்கார அம்மாளின் மருமகளுக்குப் பிரசவ வேதனை ஏற்பட்டது. வலி பொறுக்க முடியாமல் சத்தம் போட ஆரம்பித்தாள். மருத்துவம் பார்க்க மருத்துவச்சி வந்து விளக்கெண்ணெய் கேட்டாள். வீட்டில் விளக்கெண்ணெய் பாட்டில் காலியாக இருந்தது. உடனே அவளுக்கு ஒரு ஞாபகம் வந்தது. அதாவது நமது வீட்டில் தங்கியிருக்கும் வியாபாரி குடம் நிறைய விளக்கெண்ணெய் இருப்பதாகச் சொன்னாரல்லவா? 'அதில் கொஞ்சம்

ஊற்றிக் கொண்டாலென்ன?' என்று யோசித்தாள். குடத்தை வாங்கி வைத்த இடத்துக்கு மெதுவாகப் போய்க் குடத்தில் சுற்றியிருக்கும் துணியை அவிழ்த்துவிட்டுக் கரண்டியை விட்டு எண்ணெய் முகர ஆரம்பித்தாள். குடத்தினுள் ஏதோ வழுவழுப்பான பொருள் ஓசையிடுவதை உணர்ந்தாள். ஏதாவது கள்ளக் கடத்தல் பொருளா ? மெதுவாகக் கையைவிட்டுத் துழாவினாள். வட்ட வடிவமான நாணயம் ! விளக்கொளியில் கொண்டு போய்ப் பார்த்தாள். வெள்ளியின் மினுமினுப்பு தீப ஒளியிலே பளபளத்தது. ஒரு குடம் வெள்ளிப் பணம் என்றால் எவ்வளவு மதிப்புப் பெறும்? ஆசை யாரைத்தான் விட்டது? அவளுக்கு அந்தப் பணத்தின் மீது ஆசை ஏற்பட்டு விட்டது. 'வியாபாரி விளக்கெண்ணெய் என்றுதானே சொன்னான். பணத்தை அள்ளிக் கொண்டு விளக்கெண்ணெயால், குடத்தை நிறைத்து விட்டால் பணம் நமக்குச் சொந்தம். வியாபாரி ஏதாவது தகராறு பேசினால் பக்கத்து வீட்டு பரமாயி அம்மாளும் கமலாவும் சாட்சி சொல்ல வருவார்கள். அவர்கள் நிற்கும்போதுதானே குடம் ' நிறைய விளக்கெண்ணெய் இருப்பதாக வியாபாரி சொன்னான்' என்று மனத்தை ஒரு நிலைப்படுத்திக் கொண்டு பணத்தை ஒளித்து வைக்கத் துணிந்துவிட்டாள் ! 'ஆமாம், குடம் நிறைய விளக்கெண்ணெய் ஊற்றி வைக்க வேண்டுமே! ஒரு குடம் விளக்கெண்ணெய்க்கு எங்கே போவது? சிந்தனை பண்ணினாள். வீட்டிலே மருமகள் பிரசவ வேதனையால் சத்தம் போடுகிறாள். விளக்கெண்ணெய் தேவைப்படுகிறது. அதிகம் விளக்கெண்ணெய் கேட்க ஆரம்பித்தால் சந்தேகப்படுவார்கள். எப்படிச் சேகரிப்பது? இந்தப் பண விஷயம் ஒரு ஈ காக்கைக்குக்கூடத் தெரியப்படாது ! எண்ணெயும் சேகரிக்க வேண்டும்.' அக்கம்பக்கத்து வீட்டாரிடம் வீட்டுக்குக் கால்படி எண்ணெய் வீதம் மகளின் பிரசவத்துக்கென்றே கேட்டு நாலைந்து படிகள் விளக்கெண்ணெய் சேகரித்து விட்டாள். அடுத்த தெருவில் அவளுக்குத் தெரிந்தவள் ஒருத்தி கடை நடத்துகிறாள். அவளிடம் போனால் எப்படியும் தேவையான எண்ணெய் வாங்கிவிடலாம் என்று யோசித்தாள். அங்கே சென்றாள். விஷயத்தைச் சுருக்கமாகச் சொன்னாள். எண்ணெய் வியாபாரி ஒருவர் தன் வீட்டுக்கு வந்திருப்பதாகவும் ஐந்து படி எண்ணெய் தேவை என்றும் அதிக விலை கொடுத்து வாங்கிக் கொள்ளும் அளவுக்கு விலை நிதானம் தெரியாதவர் என்று சொல்லி ஐந்து படி எண்ணெய் வாங்கிக் கொண்டு வந்து குடத்தை நிறைத்துவிட்டாள். மருமகளுக்குக் குழந்தையும் பிறந்து விட்டது. இவளுடைய திட்டமும் நிறைவேறிவிட்டது.

விளக்கெண்ணெய் வியாபாரி காலையில் எழுந்து ஊருக்குப் புறப்படத் தயாரானான். அவனுக்குக் காலையிலும் சாப்பாடு போட்டு உபசரிக்கத் தவறவில்லை. திருப்தியாகச் சாப்பிட்டான். ஊருக்குப் புறப்படும் பொழுது எண்ணெய்க் குடத்தை வாங்கிக் கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் குடத்தில் சுற்றப்பட்டிருந்த துணியை மெள்ள அவிழ்த்துக் கைவிட்டுப் பார்த்தான் ! என்ன ஆச்சரியம் குடம் நிறைய விளக்கெண்ணெய் ததும்பிக் கொண்டிருந்தது! உடனே அவன் உடல் நடுங்கியது. ஆயிரம் தேள்கள் ஒன்றாகக் கொட்டி வலியை ஏற்படுத்தியது போல் இருந்தது. ''ஐயோ! கைக்கு எட்டிய பணம் வாய்க்கு எட்டாமல் போய் விட்டதே! இது ஒரு மாயமாகத்தான் இருக்கிறது. இந்தப் பணத்தை நம்பி என் காது ஒன்றையும் இழந்து விட்டேனே! இனி இந்த அவமானத்தை எப்படி வெளியே சொல்லுவது? பைத்தியம் பிடித்தவன் மாதிரி இருந்தான்!

'குடத்திலே பணம்தான் இருந்தது என்று சொன்னால் இனி யார் நம்புவார்கள்? குடத்தில் விளக்கெண்ணெய் இருப்பதாகச் சொல்லும்போது எத்தனை பெண்கள் இங்கே இருந்தார்கள்! பணம் இருந்தது என்று சொல்லி வாதாட ஆரம்பித்தால் அவர்கள் எல்லாரும் சாட்சி சொல்ல வந்துவிட மாட்டார்களா? நம்மை ஒரு பைத்தியக்காரன் என்று பிடித்து அடிக்க ஆரம்பித்தாலும் ஆச்சரியப்பட முடியாது' என்று எண்ணினான்!

வீட்டினுள் குழந்தை சத்தம் கேட்டு அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்கள் வந்து குழந்தையைப் பார்த்துவிட்டுச் செல்லும்போது சொல்லுவது வியாபாரியின் காதுகளில் விழுந்தது. ''குழந்தை எவ்வளவு அழகா யிருக்கு. ஆனால் காது மட்டும் இல்லாமல் மூளியாக இருக்கே! முன் பிறப்பிலே என்ன பாவம் செய்ததோ மூளிக் காதாகப் பிறந்து விட்டது.''

இந்த மூளிக் காதனுக்குத்தான் அந்தப் பணம் சொந்தமா? என் பண ஆசையால் நானுமல்லவா மூளியானேன் என்று வருத்தத்துடன் எழுந்து நடக்க ஆரம்பித்தான் விளக்கெண்ணெய் வியாபாரி.




''பந்து விளையாடும்போது நம் வீட்டு ன்னலின் கண்ணாடியை உடைத்து விட்டேன் என்று உன்னிடம் உண்மை யைச் சொன்னால் நீ கோபித்துக் கொள்வாயா அப்பா ?''
''ஆமாம், கெட்ட கோபம் வரும்''
''அப்படியானால் நான் உன்னிடம் சொல்லப்போவதில்லை!''



பாட்டி : பழைய வேலையை விட்டு விட்டாயே, வேறு வேலை கிடைத்ததா?
பேரன் : ஒரு கம்பெனியில் கவர்களுக்கு ஸ்டாம்பு ஓட்டும் வேலை கிடைத்தது.
பாட்டி : ஏதோ வேலையில் ஒட்டிண்டிருந்தால் சரி.



பையன் : கண்களில் கோளாறு. கண் ன்னால் கறுப்புப் புள்ளிகள் தெரியறது.
தகப்பனார் : டாக்டரைப் போய்ப் பாரு ன்று தினமும் கறுப்புப் புள்ளிகளையே ர்த்திண்டிருந்தால் எப்படி?



குட்டி யானை 1 : என் தட்டிலிருந்த கொழுக்கட்டை யைக் காணோம்!
குட்டி யானை 2 : என் தட்டிலிருந்ததையும் காணோம்; யாரோ எடுத்துண்டுட்டா.
தாய் யானை : அங்கே என்ன கலாட்டா? நான் இன்னும் கொழுக்கட்டையே பண்ணியாகல்லே.



அம்மா : ஏன்டா அழறே?
பையன் : அப்பா ஏணியிலேருந்து பொதக்னு விழுந்துட்டார்.
அம்மா : அப்பா விழுந்துட்டதுக்குக் குழந்தை அழறது. என்ன அன்பு...?
அப்பா : அன்பா? நான் விழுந்ததைப் பார்த்து 'ஓ'ன்னு சிரிச்சான். நானு அறை கொடுத்தேன். அதனால்தான் அழறான்.

சிரிக்கச் சிரிக்க...!

சாமா

ஈ. வே. ரா. பெரியாரைப் போட்டுப் பாருங்களேன்? —தாணு



அடுத்த இதழில் யார்?



நீரிலே மிதக்கும் நாடு

விகேயெம்

''ஒரே வெள்ளக் காடாம். நதிகளி லெல்லாம் நீர் மட்டம் அபாய எல்லேக்கு மேலே போய்விட்டதாம்...... வாழ்க்கையே ஸ்தம்பித்து விட்டது என்று போட்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே ஒரு துளி மழையைக் காணோம். புழுக்கம் தாங்க முடியவில்லை'' என்று செய்திப் பத்திரிகையும் கையுமாக வந்தான் கிட்டு.

''உலகிலேயே மிக அதிக மழை பெய்யும் இடம் எங்கே இருக்கிறது தெரியுமா அண்ணா? அஸ்ஸாமிலுள்ள சிரபுஞ்சியில். அது நம் இந்தியாவுக்குப் பெருமை இல்லேயா?'' என்றாள் பட்டு.

''மழையையும் வெள்ளத்தையும் கண்டு இப்படிப் பதறுகிறாயே! மழை கொட்ட வேண்டும், நாடே வெள்ளக் காடாக வேண்டும் என்று பிரார்த்தனே புரியும் தேசமும் இருக்கிறது தெரியுமா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார் பரமேசுவரன் தாத்தா.

''ஏதாவது பாலேவனப் பிரதேசமாக இருக்கும்'' என்றான் கிட்டு, அலட்சியமாக.

''அதுதான் இல்லே. நல்ல செழிப்பான தேசம். அது மட்டுமல்ல. அங்கு நம் ராமாயணத்தை நாட்டிய நாடகமாக ஆடுகிறார்கள். புத்தரைத் தெய்வமாக வணங்குகிறார்கள். 1932ம் ஆண்டு வரை மன்னரின் ஆட்சிக்குட்பட்டிருந்த தேசம். எங்கே, இப்போது சொல்லுங்கள், அது எந்தத் தேசமென்று?'' என்று புதிர் போட்டார் தாத்தா.

புத்திசாலிகளாயிற்றே, கிட்டுவும், பட்டுவும். ''புத்த மதம், ராமாயண நாட்டிய நாடகம், மன்னரின் ஆட்சி என்றால் அது ஆசியாவில் உள்ள ஒரு தேசமாகத்தான் இருக்க வேண்டும்'' என்றாள் பட்டு.

''இன்னும் சில குறிப்புக்களேயும் சொல்கிறேன். கண்டு பிடிக்க முடிகிறதா பாருங்கள். நம்மைப் போலவே அவர்களும் தங்கள் குழந்தைகளே இடுப்பில்தான் தூக்கிக் கொள்ளுவார்கள். அந்த நாட்டுக்கு இன்று ஒரு பெயர் இருந்தாலும் 800 ஆண்டுகளுக்குமுன்பு வேறு பெயரில்தான் வழங்கி வந்தது. எங்கே, எந்த நாடு அது சொல், பார்க்கலாம்'' என்றார் பரமேசுவரன்.

கிட்டுவின் கருங்கிய புருவம் அகன்றது. ''சொல்லி விடுகிறேன். எங்களே அங்கு அழைத்துப் போவீர்களா?'' என்றான்.

''ஓ.கே....!'' என்றார் தாத்தா.

''தாய்லாந்து. சரிதானே? தாய்லாந்தின் அன்றையப் பெயர் சயாம். சரிதானே?''

''கரெக்ட், வெரி கரெக்ட்!'' என்ற தாத்தா தம் மந்திர மெழுகு டப்பாவை இடையிலிருந்து எடுத்துக் கொண்டே. ''தென்கிழக்கு ஆசியாவிலுள்ள இந்தத் தாய்லாந்து வாசிகளுக்குத் தகப்பன் லாந்து சீனு தேசம்தான். தாய்வாசிகளில் ஆதியில் பாதி ஒரு காலத்தில் சீனுவில்தான் வாழ்ந்து வந்தார்கள். சீன ஜனப் பெருக்கம் பற்றித்தான் உலகமறிந்த விஷயமாயிற்றே.... ஜனப் பெருக்கம் தாய் மக்களேத் தெற்கு நோக்கித் தள்ளியது. ஸயாமில் குடியேறிய தாய் மக்கள் அந்த நாட்டையே தாய்லாந்தாக்கி விட்டார்கள். சரி, கிளம்பலாமா தாய்லாந்துக்கு?'' என்றவர் மெழுகைக் கொஞ்சம் எடுத்து இருவரின் புருவத்திலும் தீற்றினார் அடுத்த விநாடி — ஷஸாம்....!

மூவரும் சயாம் நாடான தாய்லாந்தில் இருந்தார்கள். அவர்கள் நின்றிருந்தது ஒரு நெல் வயலில். அறுவடையாகிப் பூமி காய்ந்திருந்தது, வெடிப்புக்களோடு. தூரத்தில் ஓர்

எருமை மீது ஒரு பையன் ரொம்ப அலட்சியமாக உட்கார்ந்திருந்தான்.

தகிக்கும் வெய்யிலின் உக்கிரத்திலிருந்து தப்ப அவன் பெரிய குடை போன்ற தொப்பி அணிந்திருந்தான் தலையில். அருகே இன்னொரு எருமை மீது அதன் பரந்த முதுகில் அமைதியாகப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான் ஒரு பையன். இவன் தம்பியாக இருக்க வேண்டும்.

''சாவோங் சௌக்கியமா?'' என்றார் தாத்தா, ரொம்ப நாட்கள் பழகியவரைப் போல. தன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதும் எருமை மீது அமர்ந்திருந்த பையன் தனது வெண் பற்கள் பளிச்சிடச் சிரித்துக் கொண்டு மாட்டின் மீதிருந்து கீழே குதித்து இவர்களிடம் ஓடி வந்தான்.

''வாருங்கள், வாருங்கள்! இந்தியாவிலிருந்துதானே வருகிறீர்கள்?'' என்று வரவேற்றான் சாவோங் என்ற அந்தப் பையன். கிட்டுவும் பட்டுவும் கை கூப்பி வணங்கி வணக்கம் தெரிவித்தார்கள்.

''கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரே வயல் வெளியாக இருக்கிறதே, உங்கள் நாட்டில் வீதிகள், நகரங்கள் எதுவும் கிடையாதா?'' என்று கேட்டாள் பட்டு.

''இல்லாமல் என்ன? ஆனால் உங்கள் நாட்டைப் போல் கிடையாதுதான். எங்கள் தாய்லாந்து 'மற்ற நாடுகளிலிருந்து வித்தியாசமான தேசம். தேசப் படத்தைப் பார்த்தாலே தெரியுமே. எங்கள் நாட்டை மலைகள் சூழ்ந்திருக்கும். நடுவிலே மிகப் பெரிய சமவெளி. இந்தச் சமவெளிப் பிரதேசம்தான் எங்கள் நாட்டின் இதயம் போன்றது. இப்போது கோடைக் காலம். அதனால் நீங்கள் மண் தரையைப் பார்க்க முடிகிறது: மாரிக் காலத்தில் இங்கு வந்தீர்களானால் பூமியையே காண முடியாது. எங்கு பார்த்தாலும் வெள்ளக் காடாகத்தான் இருக்கும்'' என்றான் சாவோங்.

''அத்தனை மழையா பெய்யும் இங்கு?'' — இது கிட்டு.

''மழை பெய்யும். ஆனால் எங்களுக்கு ஏகமான நீர் தேவையாயிற்றே. உங்களுக்குத் தெரியாதா, நெல் சாகுபடிக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டுமென்று? எங்கள் முக்கிய பயிர்த் தொழில் நெல் சாகுபடிதான். நெற்பயிர் பெரிய பகாசுரனாயிற்றே. ஏராளமான தண்ணீர் தேவை. 72 அங்குலம் அதாவது ஆறு அடி தண்ணீர் தேவை அது வளரும் பருவத்தில். இத்தனை மழை இந்தச் சமவெளியில் பெய்யாது. மிக அதிகமான மழை பெறும் இடம் கடற்கரை மீதுள்ள எங்கள் தலைநகரான பாங்காக்தான். அங்கேயே வருஷத்தில் 60 அங்குல மழைதான். எங்கள் நாடான தாய்லாந்து பூமத்திய ரேகைக்கு அருகில் இருப்பதால் இத்தனை மழை பெய்தும்கூடப் பூமியில் விழுந்ததும் ஆவியாகப் போய்விடும். நெல்லின் தாகத்துக்கும் பசிக்கும் தேவையான தண்ணீரை மழை நீரால் மட்டும் ஈடுகட்ட முடியாது...''

''அப்படியானால் எப்படித்தான் உங்களுக்கு அவ்வளவு தண்ணீர் கிடைக்கிறது?''

''நதிகள் நீரைக் கொண்டு வந்து கொட்டுகின்றன.''

''அடேயப்பா, அவ்வளவு பெரிய நதியா உங்கள் நாட்டில்?'' என்றாள் பட்டு வியப்புடன்.





''ஒரு நதி இல்லை... நதிகள் என்று சொல்லு'' என்றார் பரமேசுவரன்.

''ஆமாம். நதிகள் நிறைந்த நாடு எங்கள் தாய்லாந்து'' என்றான் லாவோங். இதற்குள் ஒரு பெண் இடுப்பில் தன் குட்டித் தம்பியுடன் அங்கு வந்தாள். ''இவள் பெயர் சித்ரா. என் சகோதரி'' என்று அவளை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான் லாவோங்.

''சித்ராவா? நம் ஊர்ப் பெயரைப் போலவே இருக்கிறதே'' என்று வியந்தாள் பட்டு.

''உங்களோடு எங்களுக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. எங்கள் புத்த மதம் உங்கள் நாட்டிலிருந்து வந்ததுதானே? நாங்கள் எல்லோருமே பௌத்தர்கள் தான். எங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் புத்தருக்குக் கோயில்கள் உண்டு.''

''அது சரி. நதிகளைப் பற்றிச் சொன்னாயே, உங்கள் நாட்டில் முக்கிய நதியின் பெயர் என்ன?'' என்று கேட்டான் கிட்டு.

''நான் சொல்லுகிறேன் அண்ணா. இவர்கள் தலைநகரான பாங்காக் மேனாம் நதிக்கரையில் இருக்கிறதென்று படித்திருக்கிறேன். ஆகவே 'அந்த நதிதான் முக்கிய நதியாக இருக்க வேண்டும்'' என்றாள் பட்டு.

லாவோங்கும் சித்ராவும் சிரித்தார்கள். ''எங்கள் தாய்மொழியில் நதிக்கு மேனாம் என்றுதான் பெயர். எல்லா நதிகளையுமே நாங்கள் மேனாம் என்றுதான் அழைப்போம். தாய்லாந்தில் முக்கியமான நதி என்று எதையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. எங்கள் நாட்டைச் சூழ்ந்துள்ள மலைகளிலிருந்து நடுவில் உள்ள சமவெளிக்கு ஏராளமான நதிகள் உற்பத்தியாகி வருகின்றன. இப்படி மலைகளிலிருந்து உற்பத்தியாகி ஓடிவரும் நதிகள் சமவெளியில் ஒன்றுசேர்ந்து மறுபடியும் பிரிந்து புதிய நதியாக ஓட ஆரம்பிக்கும். ஆகவே எங்கள் தாய்லாந்து முழுதுமே வலை பின்னினாற்போலப் பல நதிகளால் சூழப்பட்டிருக்கும். ஜூலை ஆகஸ்ட் மாதங்களில் இங்கு வந்தீர்களானால் எங்கள் சமவெளிப் பகுதி முழுதும் அநேகமாக நீரில் மூழ்கியிருக்கும். இப்படி ஒவ்வொரு ஆண்டும் எங்கள் நாடு வெள்ளத்தால் மூழ்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்ளுவோம். இல்லாவிட்டால் நாங்கள் பட்டினி கிடக்க வேண்டியதுதான்.''

''வருஷத்துக்கு 72 அங்குல மழை வேண்டும் என்கிறீர்களே, அத்தனையையும் உங்கள் நதிகளா கொண்டு வந்து கொட்டுகின்றன?'' என்று கேட்டான் பட்டு.

''ஆமாம். மலைப் பகுதிகளில் வருஷத்தில் அநேகமாக நூறிலிருந்து நூற்றைம்பது அங்குல மழை பெய்யும். அம் மழை நீர் நதிகளில் வெள்ளமாகப் பெருக்கெடுத்து வயல்வெளிகளை மூழ்கடிக்கும்.''



''அது சரி, இப்படிப் பல மாதங்கள் நீரில் மூழ்கிக் கிடக்கும் உங்கள் நாட்டில் நீங்கள் எப்படி எங்கு வீடு கட்டி வாழுகிறீர்கள்?'' என்றான் பட்டு.

''எங்கள் வீட்டை நீங்கள் பார்த்ததில்லை. அழைத்துப் போகிறேன். கால்களை நட்டுப் பரண் அமைத்து அதன் மீதுதான் வீடு கட்டிக் கொள்வோம். ரஸ்தாக்கள் வெள்ளப் பெருக்கின் போது பயன்படாதில்லையா? ஆகவே எங்களுக்குப் போக்குவரத்துக்கான சாதனம் சாலைகள் இல்லை. நதிகளும் கால்வாய்களும்தான். இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால்கூட எங்கள் தலைநகருக்குப் போக ரஸ்தாக்களே கிடையாது. எல்லாம் நதிப் போக்குவரத்துத்தான்.''

''உங்கள் தாய்லாந்தில் நதிகள் விவசாயத்துக்கு மட்டுமில்லாது, கிராமப்புறத்து நெடுஞ்சாலைகளாகவும் பயன்படுகின்றன இல்லையா?''

''குடிநீருக்கும் இந்த நதிகளைத்தான் நாங்கள் நம்பி யிருக்கிறோம். நீர் நிறைந்த இந்த வயல் பகுதிகளில் மோட்டாரோ, டிராக்டர் போன்ற நவீன வசதிகளோ செயல்பட முடியாது. ஆகவே வயல் வேலைகள் முழுவதும் மனித உழைப்பாலும் பிராணிகளின் உதவியாலுமே நடைபெறுகின்றன'' என்றான் ஸாவோங்.

''பிராணி என்றால் இந்த எருமைகளைத்தானே குறிப்பிடுகிறாய்?'' என்று கேட்டான் கிட்டு.

''ஆமாம். சேற்று நிலத்தில் கலப்பையை இழுத்துக் கொண்டு செல்ல இதற்குள்ள பலம் வேறு எதற்குமே கிடையாது. தவிர நீரில் கிடப்பதென்றால் இதற்குத் தனி உற்சாகம். உங்கள் நாட்டிலும்தான் எருமைகள் இருக்குமே. அதன் குணம் உங்களுக்குத் தெரியாதா?'' என்றான் ஸாவோங்.

''நெல்லைத் தவிர வேறு எதையுமே நீங்கள் விளைவிப்பதில்லையா?'' என்று கேட்டான் பட்டு.

''நெல்தான் எங்கள் முக்கிய பயிர். எங்கள் தேவைக்குப் போக ஏற்றுமதி செய்யும் அளவுக்கு விளைவிக்கிறோம் நெல்லை. அது தவிர காய்கறிகள் பழங்கள் இவைகளையும் சில பகுதிகளில் பயிர் செய்கிறோம். மிக உயர்ந்த புகையிலையைக் கூடச் சில இடங்களில் சாகுபடி செய்கிறோம். கோழி, வாத்து பன்றி, எருமை இவைகளையும் வளர்க்கிறோம். ஓர் உண்மை தெரியுமா உங்களுக்கு? தாய் மக்களில் அநேகமாக யாரும் பால் குடிக்க மாட்டோம்.



குழந்தைகள்
நடனப் போட்டி !

சமீபத்தில் ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் மேற்குப் பெர்லின் நகரில் சிறுவர் சிறுமியர்களுக்கான நடனப் போட்டி நடந்தது. போட்டியில் கலந்துகொண்டவர்கள் ஏழு வயது முதல் பத்து வயது வரையிலான சிறுவர், சிறுமியர். இவர்களை இரு வயதுப் பிரிவுகளாகப் பிரித்து நடனப் போட்டி நடத்தப்பட்டது. (யு.பி.எஸ்.)

ஆகவே, கால்நடைகளைப் பால், தயிர், வெண்ணெய் போன்றவற்றுக்காக வளர்ப்பதில்லை. இறைச்சிக்காகவும், வண்டிகளை இழுக்கவுமே கால்நடைகளை வளர்க்கிறோம்'' என்றான் ஸாவோங்.

பால் அருந்தாத மனிதர்களைப் பற்றி வியந்துகொண்டே ஸாவோங், சித்ராவுடன் அவர்கள் கிராமத்து வீட்டுக்கு நடை போட்டார்கள் கிட்டு, பட்டு, தாத்தா மூவரும். கிராமத்துச் சாலை பல நூறு வருஷங்களாக மாட்டு வண்டிகள் ஒரே தடத்தில் போய் வருவதால் ஏற்பட்ட வண்டித் தடத்தின் ஆழம் ஓர் அடி வரை பள்ளமாக இருந்தது. இது கிட்டுவுக்கும் பட்டுவுக்கும் அதிசயமாக இருந்தது.

ஸாவோங்கின் வீடு கம்பங்களின் மீது (பரணில்) கட்டப்பட்டிருந்தது. ஒரே வீடல்ல. இரு வீடுகள். காரணம் அவர்கள் குடும்பம் பெரியது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமெல்லாம் அங்கு கிடையாது போலிருக்கிறது. ஸாவோங்குக்கு ஐந்து சகோதரர்களும் நான்கு சகோதரிகளும். 'அப்பாடி!' என்று திறந்த வாயைப் புறங்கையால் மூடிக்கொண்டாள் பட்டு.

வீட்டுக்கு அடியில் நதி ஓடிக்கொண்டிருப்பதால் தாய்லாந்துக் குழந்தைகளுக்கு நீரைக் கண்டால் ஒரே குஷி. பொழுது போகா விட்டால் நீரில் குதித்து நீந்தி விளையாடுகிறார்கள்.

கிட்டுவுக்கும் பட்டுவுக்கும் விருந்தளிப்பதற்கு ஸாவோங் பரபரவென்று உயர்ந்த தென்னை மரத்தின் மீது சர்வ அலட்சியமாக ஏறினான். ஒரு குலை இளநீரை வெட்டிக் கீழே தள்ளினான். அவன் தம்பி அவனை விட வேகமாகவும் லாகவமாகவும் அந்த இளநீர்களைச் சீவி விருந்தாளிகளுக்கு வழங்கினான்.

அதே சமயத்தில் ஸாவோங்கின் சகோதரிகள் ஏதோ கைவேலை செய்துகொண்டிருந்தார்கள். பட்டு அதை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள். சித்ரா அவளுக்கு அதை விளக்கினாள். ''பெண்களாகிய எங்களுக்குக் கைவேலை இது. மூங்கில் குச்சிகளால் வண்ண வண்ணக் குடைகளைச் செய்வோம். துணிக்குப் பதில் ஒருவகைக் காகிதத்தைப் போட்டு இதன்மேல் மூடுவோம். விசேஷமான காகிதம் அது. மெழுகு பூசப்பட்டுச் சுருக்கப்பட்டிருக்கும். இதையும் கிராமத்தில்தான் தயாரிக்கிறார்கள். இந்தக் குடைகளின் மீது அரக்கு கொண்டு அழகழகான வண்ணச் சித்திரங்களைத் தீட்டி வெயிலில் காய வைப்போம். அருகிலுள்ள நகரங்களில் இந்தக் குடைகள் நல்ல விலைக்குப் போகும்.''

அவர்களின் விரல்கள் இயங்கும் வேகத்தையும் குழைவையும் கண்டு அதிசயித்தார்கள் கிட்டுவும் பட்டுவும். அப்போது ஸாவோங் சொன்னான்: ''சித்ரா நாட்டியமாடுவதில் ரொம்பக் கெட்டிக்காரி. குடைக்குச் சித்திரம் தீட்டும்போதே அவள் விரல்களின் வேலை வேகத்தைக் கண்டு மயங்கும் நீங்கள் அவள் நாட்டியமாடும்போது அந்த விரல்களின் சுழற்சியையும் வெளியிடும் பாவங்களையும் பார்த்தீர்களானால் பிரமித்துப் போவீர்கள். இன்று சாயந்திரமே கூட ஓர் ஊர்வலம் இருக்கிறது. ஊர்க் கோயிலுக்கு நிதி வசூல் செய்ய நாட்டியமாடியபடி நகர வீதிகளில் ஊர்வலமாகப் போவோம். எங்களுடைய நாட்டியங்கள் எல்லாமே மத

சம்பந்தமானவைகளாக இதிகாச புராணக் கதைகளை விளக்குவதாக இருக்கும். எங்கள் நாட்டியத்தில் கைகளின் அசைவுதான் முக்கிய அம்சமாக இருக்கும்.

''பள்ளிக்கூடத்தில் பெண்களுக்கு நாட்டியமும் ஒரு முக்கிய பாடம். மேற்கத்திய நாடுகளில் விளையாட்டு எப்படிக் கட்டாயமோ, அப்படி எங்கள் நாட்டில் நாட்டியம் பயிலுவதும் கட்டாயம். எங்கள் நாட்டிய நாடகங்களில் முக்கியமானது உங்கள் நாட்டின் புகழ் பெற்ற இதிகாசமான ராமாயணமும் ஒன்று. ராவணன்தான் இதில் வில்லன். நீங்கள் அவசியம் காண வேண்டிய நடனம் அது. மற்றவர்களை விட உங்களால் அதை ரசிக்க முடியும்'' என்றான் ஸாவோங்.


''பாங்காக்குக்குப் போய்விட்டு அப்படியே ஊர் திரும்பலாம்'' என்றான் கிட்டு. தாத்தாவும் ஒப்புக் கொண்டார்.


வழி அனுப்பும்போது ஸாவோங் சொன்னான்: ''தென் கிழக்கு ஆசியாவிலேயே ஐரோப்பியர்களால் அடிமை கொள்ளப்படாத ஒரே நாடு எங்கள் தாய்லாந்துதான். தலைநகர் பாங்காக்கில் நீங்கள் ஐரோப்பியர்களின் நாகரிகத்தைக் காணலாம். ஆனால் அதைத் தவிர வேறு எந்த ஊரிலும் மேலை நாகரிகத்தின் சாயல் கூட இருக்காது..''

ஊர் திரும்பிய கிட்டு சொன்னான்: ''தாத்தா! நாம் வேறு புதிய தேசத்துக்குப் போய் வந்த உணர்வே ஏற்படவில்லை. தமிழ் நாட்டில் தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள ஒரு கிராமத்துக்குப் போய் வந்தது போல்தானிருக்கிறது; பரண் வீடுகள், படகுகளில் வர்த்தகம், இவைகளைத் தவிர.''

''நம் இந்திய நாகரிகம் ஒரு காலத்தில் எதுவரை பரவி யிருந்திருக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டுத்தான் இது'' என்றார் பரமேசுவரன் தாத்தா. சித்ரா அன்பளிப்பாகக் கொடுத்திருந்த ஒரு குடையைப் பிரித்துச் சுழற்றியபடி அதன் அழகில் மயங்கிக் கிடந்தாள் பட்டு.

செய்துதான் பாருங்களேன்!





அவசரமாக வெளியே போகக் கிளம்புகிறீர்கள். சட்டைப் பித்தான் அறுந்து போயிருக்கிறது. எரிச்சலாக வரும். சரி, ஒரு பித்தானைத் தைத்துக் கொள்ளலாம் என்று ஊசி நூலைத் தேடினால் கைக்குக் கிடைக்காது. ஆத்திரத்துக்குக் கேட்கவே வேண்டாம். அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் ஊசி எங்கே, பித்தான் எங்கே என்று தேடுவதை நிறுத்த வேண்டுமா? படத்தில் உள்ளதைப் போல் மூடி போட்ட ஒரு பிளாஸ்டிக் கூடை வாங்குங்கள். உங்கள் வீட்டிலேயே இருந்தாலும் இருக்கலாம். அதன் உட்பக்கச் சுற்றளவுக்குச் சரியாக நல்ல பூப்போட்ட துணியை எடுத்துக் கொள்ளவும். மெல்லியதான இலாஸ்டிக் பட்டியை எடுத்து ஐந்து அல்லது ஆறு கானிகள் ஏற்படும்படி நடு நடுவில் தையல் போட்டுக் கொள்ளவும். கத்தரிக்கோல், இன்ச் டேப், ஊசிகள் நிறைந்த குழல், முக்கியமாய்த் தேவைப்படும் நூல்கண்டுகள் முதலியவற்றை அவற்றுள் செருக முடியும். கையளவுக்கு இரண்டு துணிகளை வெட்டிக் கொண்டு படத்தில் காட்டியிருப்பது போல் சிறிய பாக்கெட்டு ஆகுமாறு இலாஸ்டிக் பட்டியின் இருபுறமும் வைத்துத் தைத்துக் கொள்ளுங்கள். இவை கலர் பட்டன்கள், பிரஸ் பட்டன்கள் முதலியவற்றை வைக்கப் பயன்படும். துணியில் பாக்கெட்டுகள் இலாஸ்டிக் பட்டி தைத்தானதும், ஓரங்களை மடித்துக் கூடையிலுள்ள துவாரங்களுக்குள் ஊசியைச் செலுத்தித் துணியைக் கூடையுடன் தைக்கவும். துணி ஒன்று சேரும் இடத்தில் மடிப்பை ஒன்றின் மேல் ஒன்று வைத்து அழகாகத் தைக்கவும். வட்டமாகக் கத்தரித்த துணியைக் கொண்டு கூடையின் அடிப் பாகத்தையும் மூடலாம்.

அரை குறையாய்த் தைத்த துணிகள் தூசு படாமல் இருக்க இதனுள் போட்டு மூடி வைக்கலாம். இதையே பரிசுப் பொருளாகக் கொடுக்க எண்ணினால், ஓரம் தைக்கும்போது அழகான கலர் ரிப்பனையும் சேர்த்துக் கொள்ளலாம்.

— திருமதி வி. ராஜகோபாலன்

குறும்புத்தனம் கூடாது

ஏ. லட்சுமி

சேகர் எப்போதுமே ஏதாவது குறும்புத்தனம் செய்து அதில் காணும் மகிழ்ச்சியில் திளைத்துப் போவான். தினசரி காலையில் பாடம் கூடப் படிக்காமல், ஏதாவது விஷமம் பண்ணிக் கொண்டே யிருப்பான். 'புஸ்தகத்தை எடுத்துப் படிடா' என்று பெற்றோர்கள் சொன்னால் கேட்கவே மாட்டான். அவன் விரும்பிச் செய்யும் குறும்புத்தனம் இதுதான்:

பேப்பரைத் துண்டு துண்டாகக் கிழித்து, அதில் கல்லோ, மண்ணோ எதையாவது போட்டுப் பொட்டலம் கட்டி வீதியில் தூக்கி எறிவான். கீழே பொட்டலம் கிடந்தால் என்னவோ ஏதோவென்று எடுத்துப் பிரித்துப் பார்ப்பது இயற்கைதானே! அப்படி அந்தப் பொட்டலத்தைக் குனிந்து எடுத்து, பிரித்துப் பார்ப்பவர்கள் ஏமாற்றத்துடன் உதட்டைச் சுழித்தபடி தூக்கி எறிபவர்களைக் காண அவனுக்குத் தனிக் கொண்டாட்டமாக இருந்துவந்தது.

'பிறரை இப்படி ஏமாற்றக் கூடாது' என்று தாய்—தந்தையர் சொன்னது அவன் காதில் விழவேயில்லை. அவன் தன் குறும்புத்தனத்தை நிறுத்தவுமில்லை.

ஒரு நாள் காலை.

சேகரை அவன் தாயார் அழைத்துக் கடையில் சீவல் வாங்கி வரச் சொன்னாள். சேகரும் சீவல் வாங்கிக் கொண்டு வீடு திரும்பினான்.

வழியில் பளபளவென்று இரண்டு ஐந்து பைசா நாணயங்கள் கிடந்தன. சேகர் அதை ஆவலோடு எடுத்து நிஜார் பையில் போட்டுக் கொண்டான். பிறகு ஒரு பொட்டலமும் கிடந்தது. அதை எடுக்கக் கொஞ்சம் தயங்கினான்.

ஐந்து பைசா கிடைத்த ஆனந்தம், அது அந்தப் பொட்டலத்திலிருந்தே விழுந்திருக்குமோ என்ற ஆவல் எல்லாம் சேர்ந்து பொட்டலத்தை 'லபக்'கென்று எடுத்துக் கொண்டு வீட்டை யடைந்தான்.

பர பரவென்று பொட்டலத்தைப் பிரித்தவன் 'வீல்' என்று அலறிப் பொட்டலத்தைத் தூக்கி எறிந்தான். ஆம். அதில் கொடுக்கு நறுக்கிய சிறிய தேள் ஒன்று இருந்தது. அது இவன் விரலைக் கவ்விக் கொண்டது. கையை உதறியபடி உள்ளே ஓடினான்.

தாய், ''என்ன? என்ன?'' என்று பதறியபடி கேட்டாள். சேகர் நடந்ததைச் சொன்னான்.

''பார்த்தாயா, நீ பிறரை ஏமாற்றினாய். தெய்வம் உனக்குத் தண்டனை கொடுத்து விட்டது. இனி இந்த மாதிரி குறும்புத்தனம் செய்யாமல் பிறர் ஏமாறுவதில் ஆனந்தத்தைக் காணாமல், சமர்த்தா யிருக்கணும் தெரிந்ததா?'' என்றாள்.

''இல்லையம்மா! இனிமே நான் குறும்புத்தனம் செய்யாமல் சமர்த்தா யிருக்கிறேன்'' என்றான் சேகர்.



தெரியுமா?

700. க்யூபெக் யுத்தம் 1759ம் ஆண்டு நிகழ்ந்தது. எந்த இரு தேசங்களுக்கிடையே நடைபெற்றதென்று சொல்ல முடியுமா?

701. ரோண்ட்ஜென். (Rontgen) என்ற விஞ்ஞானி ஓர் அற்புத ஒளியைக் கண்டுபிடித்தார். அதன் பெயர் என்ன தெரியுமா?

702. பெட்ரோலியத்தில் அடங்கியுள்ள முக்கிய அம்சங்கள் எவை?

703. ஜோன் ஆஃப் ஆர்க்கை உயிரோடு கொளுத்தியது எந்த இடத்தில் என்று தெரியுமா?

704. புனித ரோமானியப் பேரரசை நிறுவிய புகழ் பெற்ற ஐரோப்பியத் தலைவர் யார்?

705. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை எத்தனை எட்வர்டுகளும், வில்லியம்களும் ஆண்டார்கள் என்று தெரியுமா?

706. ஃப்யூஜியாமா எரிமலை எங்கு உள்ளது?

707. பைரனீஸ் மலைகளால் எந்த இரு நாடுகள் பிரிக்கப்படுகின்றன?

708. முர்ரே என்று ஒரு நதி, டார்லிங் என்று ஒரு நதி. இவையுள்ள நாடு எது?

709. ஆடை தயாரிக்க உதவும் பருத்தி ஒரு செடி என்று உங்களுக்குத் தெரியுமில்லையா? அதன் பூவின் நிறம் என்னவென்று தெரியுமா?

710. புராதன கிரேக்கர்களின் இதிகாசப்படி பூமித்தாயின் பெயர் என்ன?

711. காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடி எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்?

712. பிளாக்ஸ் என்ற சணல் தாவரத்தினுடைய பூ என்ன நிறம்?

713. பிளாடிபஸ் எந்த நாட்டில் காணப்படுகிறது?

714. வேர்ட்ஸ்வொர்த், காலரிட்ஜ், ஸதே இவர்கள் மூவரும் ஆங்கிலக் கவிகள். இம்மூவருக்கும் பொதுவான ஒரு சிறப்புப் பெயர் உண்டு. அது என்ன?

715. ஆலிவர் கிராம்வெல்லை ஆதரித்ததற்காக ஓர் ஆங்கில மகா கவியை இரண்டாம் சார்லஸ் மன்னர் சிறையில் தள்ளினர். அக்கவி யார்?

716. மோடிகிளியானி (Modigliani) என்பவர் அரசியல்வாதியா, ஓவியரா, ஆதிகால விஞ்ஞான எழுத்தாளரா?

717. பீதோவனின் குடும்பப் பெயர் என்ன?

718. பிஸ்கடோரியல் (Piscatorial) கழகத்துக்குத் தொடர்புடைய காரியம் என்ன?

719. தொழிற் சங்கங்களை 1799, 1800ம் ஆண்டுகளில் தடை செய்து இங்கிலாந்தின் பார்லிமெண்டு ஒரு சட்டம் இயற்றியது. அதன் பெயர் தெரியுமா?

720. நைல் நதிச் சண்டையில் ஆங்கிலக் கப்பற் படையை நடத்திச் சென்ற தளபதி யார்?

721. கங்கை, வோல்கா, ஷானன்— இம்மூன்று நதிகளில் மிக நீளமான நதி எது?

722. இலங்கையின் தலைநகர் எது தெரியுமா?

723. தாலமி, மெர்கடார் — இவ்விருவருக்கும் பொதுவான சிறப்பு என்ன?

724. இங்கிலாந்தின் இளவரசி மார்க்கரெட்டினுடைய மகனுடைய பட்டப் பெயர் என்ன என்று தெரியுமா?

725. ஸிம்ஃபோனி என்ற மேல் நாட்டு இசையில் எத்தனை அசைவுகள் என்று சொல்ல முடியுமா?

726. பிரான்ஸ் நாட்டுக்கு உரிய தான மத்திய தரைக் கடலின் கடற்கரைப் பிரதேசம் கீழ்க்கண்டவைகளில் உத்தேசமாக எதுவாக இருக்கும்? 100 மைல்கள் - 350 மைல்கள் - 850 மைல்கள்.

727. ஐரோப்பாவில் ஜெர்மனி நடுநாயகமாக விளங்கும் நாடு. இதன் எல்லை நாடுகளான எட்டு எவை?

தெரியுமே!

700. இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்குமிடையே. 701. எக்ஸ்ரே. 702. ஜலவாயுவும் கரியும். 703. பிரான்ஸிலுள்ள ரோயன் என்ற (Rouen) இடத்தில். 704. சார்லமாக்னே என்பவர். 705. ஏழு எட்வர்டுகள், நான்கு வில்லியம்கள். 706. ஜப்பானில். 707. பிரான்ஸும், ஸ்பெயினும். 708. ஆஸ்திரேலியா. 709. மஞ்சள். 710. செரஸ் (Ceres). 711. டெமோக்ரேட்டிக் (Party) கட்சியைச் சேர்ந்தவர். 712. ஆழ்ந்த நீலம். 713. ஆஸ்திரேலியாவில். 714. லேக் போயட்ஸ் - ஏரிக்கவிகள். 715. ஜான் மில்டன். 716. ஓவியர். 717. லுட்விக். 718. மீன் பிடித்தல். 719. காம்பினேஷன் ஆக்ட்ஸ். 720. லார்டு நெல்சன். 721. வோல்கா நதி. 722. கொழும்பு. 723. இருவரும் பூவியல் நிபுணர்கள். இருவரும் தேசப்படங்களை உருவாக்கினார்கள். 724. வைகௌண்ட் லின்லே. 725. நான்கு. 726. 350 மைல்கள். 727. ஹாலந்து, லக்ஸம்பர்க், பிரான்ஸ், ஸ்விட்ஸர்லாந்து, இத்தாலி, ஆஸ்திரியா, செக்கோஸ்லவேகியா, போலந்து. □

தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள...



30 F-303 TR

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர் : சதாசிவம்

வாழ்வே மென்மையின் உருவகம்



'க்ளிக்' அடித்துவைப்பீர்... நிரந்தரம்

எப்போதுமே உங்கள் கையோடிருக்கட்டும் தப்பாத் துணையான க்ளிக் III.
மறைந்தோடும் வாழ்வின் மணியான கணங்களை நிரந்தரமாக்கிக் காப்பீர்—
நினைவுமுகம் கண்முன் நிற்பதற்கே.

'இலக்கு வைத்ததும் சடக்' என எடுக்கவே ஆக்பா க்ளிக். காரியத் தகுதி வாய்ந்தது. உண்மை தவறாதது. கையாள எளிது. சிக்கனமிக்கது.

- 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் பெரிது பெரிதாக (6 x 6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.
- சிறப்பானதோர் தயார்த் தோலுறை, போர்ட்ரெய்ட் லென்ஸ், ஃப்ளாஷ்கன் ஆகியவை மேற்கொண்டு தனிவிலைக்குக் கிடைக்கும்.


தெள்ளத் தெளிவான பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மெண்டுகளுக்கும் கண்டிப்புடன் கோருவீர் ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களை.

அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-கேவார்ட் விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.

ஆக்பா-கேவார்ட் AG லீவர்குஷன் அவர்களின் கூட்டுறவோடு இவற்றைத் தயாரிப்போர்: தி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.

விலை
ரூ. 56.25
(எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).

SIMOES-AG-II-TAM



ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்
பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை.

AGI

®புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட், ஆன்ட்வெர்ப்/ லீவர்குஷன் ஆகியோரின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

Agfa

ஆக்பா க்ளிக்—இந்தியாவின் உன்னதப் புகழ்பெற்ற காமிரா.


ராசுவும் வாசுவும் புதையல் தேடிய இன்பப் படலம்
சிக்கிச் சிதறுண்டு திக்கற்ற தீவினிலே ஒதுங்கினரே!
பயணம் பல நாட்கள், புயலும் வீசியது.. பயங்கரம்
சுற்றி, சுற்றி அலைந்து ஒற்றைக் குடிசையைக் கண்டனர்
பழுத்திருந்த ஒரு கிழவன் படத்தினை வாங்கிப் பார்த்தானும்.
சொக்கும் பழச் சுவைப் பொக்கிஷம் இதுதான் சுவைப்பீர பாப்பின்ஸ்!
சொக்குமின்பம், சொட்டும் இனிமை, பலே ஜோர்
பார்லே
பாப்பின்ஸ்
பழரச மிட்டாய்கள்
5 பழரசச் சுவை வகைகள்— ராஸ்ப்பெர்ரி, அன்னாசி, எலுமிச்சை, ஆரஞ்சு, சாத்துக்குடி. ஒவ்வொரு சுருளிலும் 13 மிட்டாய் வில்லைகள்
PARLE
POPPINS